# மொரார்ஜிதேசாய்காலவரையறையற்ற உண்ணுவிரதம் மேற்கொண்டார்


R[illegible] Newspaper In Ceylon விலை சதம் 15

ஈழநாடு

THE EELA NADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 223
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 7 றஜப் 10 செவ்வாய்க்கிழமை [23-9-69]



உங்களுக்குச் சேவை செய்யும்
நோக்குடன்
யாம் ஓர் புதிய
ஜவுளி ஸ்தாபனம்
ஒன்றை ஆரம்பித்துள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவிக்கின்றோம்.
உங்கள் ஜவுளி தேவைகளை
பூர்த்தி செய்துகொள்ள
மறவாதீர்கள்
ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்
166, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.


புதுடில்லி, செப். 22

முன்னாள் துணைப் பிரதமமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் இன்று உண்ணுவிரதம் இருகக ஆரம்பித்தார்.

குஜராத்தில் ஏற்பட்டுள்ள இனக்கலவரங்கள் முடிவுறும்வரை உண்ணுவிரதத்தைக் கைவிடப்போவதில்லையென்று அவர் அறிவித்தார்.

குஜராத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வரும் இனக்கலவரங்கள் இன்று ஓரளவுக்கு அமைதியடைந்துள்ளன நேற்று பதட்ட நிலைமை மோசமாகியிருந்தது, சூறையாடுவதில் ஈடுபட்ட கும்பல்களின் மீது ராணுவத்தினர் சுட்டனர். இதில் 54 பேருக்கு காயம் ஏற்பட்டதாகவும் 3 பேர் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது. இதுவரை சுமார் 94 பேர் பலியாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது. 260 பேர்வரை நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

ஆமதாபாத்திலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் கலவரங்கள் இடம்பெற்றுள்ள இடங்களை திரு. மொரார்ஜி தேசாய் சென்றுபார்த்தார். குஜராத்தில் ஏற்பட்டுள்ள இனக்கலவரங்கள் குறித்து அவர் மிகவும் கவலைகொண்டிருக்கிறார், நிலைமைஅடங்கி அமைதி ஏற்படும்வரை தாம் உண்ணுவிரதம் இருக்கப்போவதாக அறிவித்து காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை அவர் மேற்கொண்டார்.

# இலங்கை தி.மு.கழகம் மீது சட்ட நடவடிக்கை யோசனை

## அட்டர்ணிஜெனரலிடம் பொலிசார் ஆலோசனை?

கோட்டை, செவ்வாய்

இலங்கை திராவிட முன்னேற்றக்கழக மாநில மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதைத் தொடர்ந்து, கழகத்தைத் தடைசெய்யவேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கையில் வலுப்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

திராவிடமுன்னேற்றக்கழகத்தின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நீடிக்கவிட்டால் நாட்டில் அமைதிக்குப் பங்கம் ஏற்படலாமென்றும் சிலர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நடந்த மாநில மகாநாட்டைத் தொடர்ந்து இலங்கை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் நடவடிக்கைகளையும், சொற்பொழிவுகளையும் இரகசிய பொலிசார் மிகவும் நுணுக்கமாக அவதானித்து வருவதாகவும் தெரியவருகிறது,

எதிர்க்கட்சி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சில ஆட்சிமன்ற உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பற்றி ஆராய்ந்துவருகின்றனராம். மலைநாட்டில் சில தொகுதிகளில், திராவிட முன்னேற்றக்கழகம் போட்டியிடுவது என்ற தீர்மானம் தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் சியிர் அரசாங்கத்தின் கவனத்திற்குக்கொண்டு வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் குறிப்பெடுத்த இரகசிய பொலிஸார் அறிக்கையைத் தயாரித்தபின் அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்பி வைப்பார்கள் எனப் பொலிஸ் வட்டாரங்கள்

## விமான விபத்தில் 22 பேர் பலி

மெக்ஸிக்கோ, செப்.22

மெக்ஸிக்கோ விமான நிலையத்தில் 118 பிரயாணிகளுடன் இறங்கிக் கொண்டிருந்த விமானத்தில் திடீரென முறிவு ஏற்பட்டதால் நிலத்தில் விழுந்து நொறுங்கியது. 22 பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர் பலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இச்சம்பவம் இன்று நடைபெற்றது.

சிக்காகோவிலிருந்து புறப்பட்டு வந்த இந்த விமானத்தில் அமெரிக்க உல்லாசப் பிரயாணிகளே கூடுதலாகவிருந்தனர்.

இந்த விமானத்தில் பயணம் செய்த பெண் சிப்பந்தி ஒருவர் விமானத்தில் முறிவு ஏற்பட்ட சமயம் திடீரென வெளியே தூக்கி எறியப்பட்டு, ஒரு மைல் தூரத்தில் விழுந்து, விமான நிலையத்துக்கு நடந்து வந்தாராம்.

## கம்யூனிஸ்ட் வாலிபர் மாநாடு

பருத்தித்துறை, திங்கள்

வடபகுதி கம்யூனிஸ்ட் மாஸ்கோ) கட்சி வாலிபர் மகாநாடு அடுத்த வாரம் நெல்லியடியில் நடைபெறவிருக்கிறது. திரு பொன். குமாரசாமியின் தலைமையில் நடக்கவிருக்கும் இம் மகாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு பீட்டர் கெனமன் திரு சரத் முத்தெட்டுவாகம ஆகியோர் கலந்துகொண்டுபேசுவர்.

அகடோபர் 8-ல்

## விஜயலட்சுமி பண்டித் யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்

திருமதி விஜயலட்சுமி பண்டிட் அடுத்த மாதம் 8ந் தேதி யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்கிறார் ...

### 2ந் திகதி காந்தி விழா

யாழ்ப்பாணம், செவ்

மகாத்மா காந்தி பிறந்த தி[...] விழாவை அடுத்த

# தெலுங்கானா பிரச்னைக்கு சுமுகமான தீர்வுசாத்தியம்

## ஜனாதிபதி கிரி நம்பிக்கை

செகுந்தராபாத், செப். 22

தெலுங்கானா பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்று காணமுடியும் என்று இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி இங்கு கூறினார்.

திரு. கிரி செகுந்தராபாத் வந்து சேர்ந்ததும் அமோக வரவேற்பு கொடுக்கப்பட்டது.

தெலுங்கானா பிரச்னை பற்றி எல்லா அம்சங்களையும் தாம் ஆராயப்போவதாக திரு. கிரி கூறினார். எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து அதுபற்றியதமது கருத்துக்களை பிரதமமந்திரிக்குத் தெரிவிப்பதாக அவர் உறுதிகூறினார்.

எல்லாப்பிரிவினரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் தெலுங்கானா பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியும் என்று திரு கிரி நம்பிக்கை தெரிவித்தார்.

## றோம்நகரில் பதவி வகிப்பார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மேற்றிராசனத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய அன்ரன் இராசநாயகம் சுவாமி றோமாபுரியிலுள்ள வேதசாஸ்திரக்கல்லூரி ஒன்றில் உப அதிபர் பதவி ஏற்பதற்காக றோமாபுரி பயணமானார். இவ்வுயர் பதவிக்கு இலங்கையில் இருந்து இவரே முதல் முதலாக நியமனம் பெற்றுள்ளார்.

## தம்பியைக் கட்டிவைத்து கண்ணுக்குள் மிளகாய் போட்டாராம்

மட்டுவில் திங்கள்

கூடப் பிறந்த தம்பியைக் கட்டிவைத்து அடித்துக் கண்ணுக்கு மிளகாய் போட்டாராம் அண்ணன். சாவகச்சேரிப் பொலிசார் இது பற்றி விசாரணைநடத்தினர்.

சாவகச்சேரி கற்குழியைச் சேர்ந்தவேலுப்பிள்ளை தருமராஜா என்ற 14 வயது இளைஞரை, அவரின் கூடப்பிறந்த அண்ணன். வேலுப்பிள்ளை நடராஜா என்பவர் மீசாலையிலுள்ள தனது வீட்டில் வைத்துகட்டிப்போட்டு அடித்து கண்களுக்கு மிளகாய் போட்டாராம் இது பற்றி அவர்தந்தை வேலுப்பிள்ளைசாவகச்சேரிப் பொலிசில் முறைப்பாடு செய்து கொண்டதைத் தொடர்ந்து பொலிசார் விசாரணை செய்தனர்.

வேலுப்பிள்ளை நடராஜா என்பவர் மீசாலையில் தனது விருப்பத்திற்கு திருமணம் செய்து கொண்டதைத் தொடர்ந்து அவர் பெற்றோர் அவருடன் உள்ள தொடர்பை அறுத்துக் கொண்டதாகவும் எனவே நடராஜா தனது தம்பி தருமராஜாவைத் தன்னுடன் வந்து இருக்கும்படி கேட்டபோது அவர் மறுத்ததினால் தம்பியைத் தமையன் இவ்வாறு தண்டித்ததாகவும் புகாரில் கூறப்பட்டுள்ளது.

## கடன், உதவி வழங்கத் திட்டம்

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் தெற்கு மண்டானில் தென்கருணைமக்கள் ஐக்கியசங்கம் என்ற பெயரில் புதிய கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது இச்சங்கம் மூலம் கஷ்டப்படும் உறுப்பினர்களுக்கு கடன் உதவி வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மண்டான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இச்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பண விழாவிற்குத் தலைமைவகித்த ஆசிரியர் திரு. க. செல்லத்துரை தனது தலைமையுரையில் எமதுகிராமத்தின் முன்னேற்றத்திற்கு நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு உழைக்கவேண்டும். இதற்காகச் சங்கம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கிராமங்களின் முன்னேற்றத்திற்கு பாடசாலை சனசமூக நிலையங்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், நெசவு நிலையங்கள் கி. மு, சங்கங்களை ஆக்கி ...

## ஆங்கிலம் தெரியாதாம்; ஆதலால் ராஜினாமா

திருக்கோணமலை, திங்கள்

சமீபத்தில் திருக்கோணமலை கடற்படைத் தளத்தி... கள் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் எனவும், தங்களுக்கு ஆங்கிலம் தெரியாததால் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விமானத்தில் பயணம் செய்த பெண் சிப்பந்தி ஒருவர் விமானத்தில் முறிவு ஏற்பட்ட சமயம் திடீரென வெளியே தூக்கி

...சிச் செயலாளர் திரு பீட்டர் கெனமன் திரு சரத் முத்தெட்டுவாகம ஆகியோர் கலந்துகொண்டுபேசுவர்.

# மாவோ உடல் நிலை பற்றி சீன தூதரகம் அறிவிப்பு

மாஸ்கோ, செப். 22

சீனத்தலைவர் மா-சே-துங் இறந்துவிட்டதாகவும்மரணத்தை அண்மித்துக் கொண்டிருப்பதாகவும் அடிக்கடி வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என்று மாஸ்கோவிலுள்ள சீன தூதரகம் மறுத்திருக்கிறது.

காலஞ் சென்ற 'வட வியட்னும் தலைவர் டாக்டர் ஹோசிமின்னின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற சீனப் பிரதமர் சூ-என்-லாய் உடனடியாக பீகிங் திரும்பியதையும், மரணச் சடங்கில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்புகையில் ரஷ்யப் பிரதமர் கொஸிஜினை பீகிங் விமான நிலையத்தில் சூ மட்டும் சந்தித்துப் பேசியதையும் மேற் கோள் காட்டி சீனத் தலைவர் 'மாவோ' மரணத்தை அண மித்துக் கொண்டிருப்பதாக அமெரிக்க 'டைம்' பத்திரிகையில் வெளியான கட்டுரையில் சிறிதளவு கூட உண்மையில்லையென சீனத் தூதரம் தெரிவித்துள்ளது.

மாவோ உடல் நலத்துடனேயே இருப்பதாகவும் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## 70 பேர் நீருள் மூழ்கினர்

புதுடில்லி, செப். 22

போபாலுக்கருகில் ஒரு பாலத்தைக் கடந்து செல்கையில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதால் இதில் பிரயாணம் செய்த் 70 பேர் நீருள் மூழ்கி மாண்டு விட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

## காப்பாற்றப் பட்டனர்

பச்சிலைப்பள்ளி, திங்கள்

தாளையடியிலிருந்து ஆழ் கடலுக்கு மீன்பிடிப்பதற்காகச் சென்ற இ. மலக்கியரஸ் என்பவருக்குச் சொந்தமான இயந்திர வள்ளம் நான்கு தினங்கள் கரை திரும்பாததைத் தொடர்ந்து நான்கு தினங்களும் தேடுதல் நடத்திய இயந்திர வள்ளங்கள் கடந்த வியாழக்கிழமை வள்ளத்தையும் தொழிலுக்குச் சென்ற மூவரையும் கரைக்குக்கொண்டுவந்துசேர்த்தன இயந்திரக் கோளாறே இவ்வித கஷ்டத்திற்குக்காரணம் எனத் தெரிய வந்தது.

## ஆயுள்வேத டாக்டர்களுக்கு பட்டமளிப்பு

கோட்டை, செவ்வாய்

ஆயுள்வேத டாக்டர்களுக்கான பட்டமளிப்புவிழா முதன்முதலாக இன்று நடைபெறுகிறது. பொறளை ஆயுள்வேத கல்லூரியின் 41 வருட காலத்தில் இன்று முக்கியத்துவம்வாய்ந்த நாளாகக் கருதப்படுகிறது.

ராஜகிரிய பண்டாரநாயக்கபுர வீதியிலிருந்து அணிவகுத்துப்புறப்படும் ஆயுள்வேத பயிற்சியாளர்களின் ஊர்வலத்தில் சுமார் 300 பேர் கலந்துகொள்வர். கல்லூரி அதிபர் தலைமைதாங்கிச்செல்ல, கிராமிய நடனங்களுடன் ஊர்வலம் கல்லூரி மண்டபத்தைச் சென்றடையும் தொடர்ந்துபட்டமளிப்பு விழா இடம்பெறும்.

சுன்னுகம் மயான

## கொலைவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

மல்லாகம், திங்கள்

சுன்னுகம் மயானக்கொலை வழக்கு மேல் விசாரணையை மல்லாகம்நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசாமி அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்து எதிரிகளை தொடர்ந்துவிளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது டாக்டர் நந்ததாஸ கொதகொட, இரண்டாம் எதிரியின் தாயார் இராசம்மா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மண்டைதீவு வாசியான கே. சிறிகாந்தன்என்பவரை கொலை செய்ததாக ரி. கிருஷ்ணன், என். தங்கராசா ஆகிய இருவர் மீதும் சுன்னுகம் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்டு இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

# யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

திருமதி விஜயலட்சுமி பண்டிட் அடுத்த மாதம் 8ந் தேதி யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்கிறார். அன்று காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் மாதர் மகாநாட்டில் கலந்துகொள்வார்.

அன்று காலை 8-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தில் திருமதி விஜயலட்சுமியைக் காந்தி நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர் அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸும் மற்றும் பலரும் வரவேற்பார்கள்.

விமானநிலையத்திற்கு சமுகந்தரும் பிரமுகர்களும், மற்றவர்களும் திருமதி விஜயலட்சுமிக்கு அறிமுகஞ் செய்துவைக்கப்படுவார்கள்.

அன்று மாலை திரு. கே. நேசையா தலைமையில் யாழ்ப்பாணத் திறந்தவெளி அரங்கில் நடைபெறும் கூட்டத்தில் திருமதி விஜயலட்சுமி சொற்பொழிவு நிகழ்த்துவார். கூட்டத்திற்கு முன்னர் பஜனையும் நடைபெறும்.

## 2ந் திகதி காந்தி விழா

யாழ்ப்பாணம், செவ்.

மகாத்மா காந்தி பிறந்த தி[...] விழாவை அடுத்த மாதம் 2ந் தேதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அன்று காலை வீரசிங்கம் மண்டபத்தில் பஜனை நடைபெறும். இதைத் தொடர்ந்து நடைபெறும் கூட்டத்தில் பல பெரியார்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

மகாத்மா காந்தியின் உருவப் படத்தைத் தாங்கிய ஊர்வலமொன்று வண்ணை நகரில் அன்று மாலை ஆரம்பமாகிக் கூட்ட மண்டபத்தை வந்தடையும்.

இந்த ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும் கல்லூரி மாணவ மாணவிகளும் கலந்துகொள்வார்கள்.

அக்டோபர் 8-ம் திகதி

# விபுலானந்தர் சிலை காரைதீவில் நாட்டப்படும்

## 3 தினங்கள் விழா

கல்முனை, திங்கள்

முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் உருவச்சிலையை மட்டக்களப்பை அடுத்துள்ளகாரைதீவில் அமைப்பதற்கான எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன.

அடுத்தமாதம் 8-ம் திகதி சுவாமிகளின் பிறப்பிடமான காரைதீவிலே அமைக்கப்பட இருக்கும் அவரது உருவச்சிலை இம்மாதம் 24ந் திகதி கொழும்பிலிருந்து ஊர்வலமாகக் கொண்டுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து ஆரம்பமாகும் சுவாமிகளின் உருவச்சிலை திருக்கோணமலைக்குச் சென்று அங்கிருந்து வாழைச்சேனை ஊடாக மட்டக்களப்பிற்கு வந்து அங்கிருந்து காரைதீவை 30-ம் திகதி அடையும்.

அடிகளாரின் உருவச்சிலை காரைதீவிலே நிறுவப்படுவதைத் தொடர்ந்து அடுத்த மாதம் 8-ம் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்கு விழா எடுக்கப்படும்.

மூன்று நாட்களும் நடைபெறும் விழாவில் சுவாமிகளின் யாழ்நூல் அரங்கேற்றம் பற்றிய விரிவுரையும் இடம்பெறும். ஈழத்தின்பல அறிஞர்களும் இவ்விழாவில் பங்குபற்றுவர்.

# தடையின்றி வெங்காயம் கொண்டு செல்லலாமா?

## இம்மாதம் முடிவு தெரியும்

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதியிலிருந்து தென்னிலங்கைக்கு எவ்விததடையுமின்றி வெங்காயம் எடுத்துச்செல்வது பற்றி இம்மாதம் நடைபெறும், மாவட்ட விவசாயக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

இம்மாதம் 27-ம் திகதி காலை நடைபெறும் இக்கூட்டத்தில், வடபகுதி ஆட்சி மன்ற உறுப்பினர்களும், மற்றும் விவசாய உத்தியோகத்தர்களும் கலந்துகொள்வார்கள்.

வடபகுதியில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய குழாய்க் கிணறுகள் ஏற்படுத்துவதுபற்றியும் இக்கூட்டத்தில்ஆராயப்படவிருக்கிறது.

விவசாய அபிவிருத்தித் திட்ட ஆலோசனைகள் பற்றியும், ஆராயப்படவிருப்பதாக தெரியவருகிறது.

...விட முன்னேற்றக் [...]கத் தலைவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் குறிப்பெடுத்த இரகசிய பொலிஸார் அதனைத் தயாரித்தபின் அட்டோர்னி ஜெனரலுக்கு அனுப்பி வைப்பார்கள் [...]னப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனை கிடைத்தபின் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் தொடர்பாக இவர்கள்மீது வழக்குத் தொடருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

பருத்தித்துறை

## பஸ்நிலைய அவல நிலை

பருத்தித்துறை, திங்கள்

கடந்தபல ஆண்டுகளாக பருத்தித்துறை பஸ் நிலையம் ஒதுக்கிடமின்றியிருப்பதால், பெண்களுட்பட பல பிரயாணிகள் வெயிலிலும், கொட்டும் மழையிலும் நிற்கவேண்டியுள்ளது. மேலும், கியூ விதி அனுசரிக்கப்படாமையால் வயோதிபர், குழந்தைகள், பெண்கள் ஆகியோரை ஒதுக்கிவிட்டுப் பலசாலிகள்பஸ்வண்டிகளில் ஆசனங்களை நிரப்பிவிடுகின்றனர். பிரயாணிகளுக்கென மலசலகூட ஒழுங்குவசதிகளும் செய்துவைக்கப்படவில்லை. நிலைமையைச் சுட்டிக் காட்டிப் பல பிரயாணிகள் பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினத்திற்கு முறைப்பாடு செய்து வருகின்றனர்.

## செவ்வாயில் புல்பூண்டுகூட இல்லை

நியுயோர்க், செப் 22

செவ்வாய்க் கிரகம் உயிர் வாழ முடியாத வெறும் பாலைவனம் போன்ற ஒரு கிரகம் என்று மெரினர் செயற்கைக் கிரகங்கள் மூலம் அனுப்பப்பட்ட படங்களை ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானிகள் இறுதியான முடிவுக்கு வந்துள்ளனர்.

புல்பூண்டுகூட இல்லாத சந்திரனைப்போன்ற சூன்யமானஉலகம் அதுவென்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். செவ்வாயில் கால்வாய்கள் போன்று தெரிபவை வெறும் தோற்றமே என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஆங்கிலம் தெரியாதாம்; ஆதலால் ராஜினாமா

திருக்கோணமலை, திங்கள்

சமீபத்தில் திருக்கோணமலை கடற்படைத் தளத்திலிருந்து தப்பியோடிய பயிற்சிபெற அனுப்பப்பட்ட இராணுவ உதவி அதிகாரிகள் இருவர், சில நாட்களுக்குப் பின் கடற்படை அதிகாரிகள் முன் சரணடைந்தனர்.

அவர்கள் இருவரும் தாங்கள் முகாமிலிருந்து ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஓடியதற்கான காரணத்தைக் கூறுகையில். தங்களோடு பயிற்சி பெறுபவர்கள் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் எனவும், தங்களுக்கு ஆங்கிலம் தெரியாததால் அவர்களோடு பேசமுடியவில்லை யெனவும்தெரிவித்தனர். அத்துடன் அவர்கள் தங்களை 'ஹரமானிஸ்' குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறி கேலிசெய்வதாகவும் ஆதலால் தாங்கள் ராஜினாமாச் செய்யப்போவதாகவும் தெரிவித்தனர்.

உயர் அதிகாரிகள்இவர்களின் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டனர்.

# மாதிரிக் கிராமங்கள் அமைக்க கொடித்தினம் அனுஷ்டிக்கப் படும்

யாழ்ப்பாணம், செவ்.

காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாண மாவட்டத்தில்உள்ள 12 காரியாதிகாரி பிரிவுகளிலும் 12 மாதிரி கிராமங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இந்தக்கிராமங்கள்அமைப்பதற்காக நிதி சேகரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இம்மாதம் 24-ம் திகதி முதல் 26-ம் திகதிவரை கொடித்தினமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொது இடங்களில், இத்தினங்களில் பணம் சேகரிக்கப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கல்லூரிகளிலும், இம்மாத இறுதியில் கொடித்தினம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது, வித்தியாதிபதி இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்.

ஒவ்வொரு காரியாதிகாரிகளும், தங்கள் பிரிவுகளில், கொடித்தினங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

எலகெரா கொள்ளை

## தகவலுக்கு ரூ.5000 வெகுமதி

கோட்டை, திங்கள்

எலகெரா விடுதிச்சாலையில் நடைபெற்ற கொள்ளை சம்பந்தமாக தகவல் தருபவர்களுக்கு ரூ. 5 000 வெகுமதி வழங்கப்படுமென பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி இங்கு நடைபெற்ற கொள்ளை சம்பந்தமாக ஏற்கனவே மூவர் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள போதிலும் மேலும் பலர் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றிய தகவல் ஏதும் தெரிந்தவர்கள் உடனடியாக கிட்டிய பொலிஸ் சுப்பிரின்டனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## முந்திரிச் செய்கை பாதிப்பு

பச்சிலைப்பள்ளி, திங்கள்

பல நூற்றுக் கணக்கானருத்தல் கொடிமுந்திரிகைப் பழங்களை உற்பத்தி செய்யும் தாளையடியைச் சேர்ந்த மக்கள் பலர்உரிய காலத்தில் பருவ மழை பெய்யாத காரணத்தினால் முந்திரிகைச் செய்கை பாதிப்படைந்தது குறித்து மிகுந்த நஷ்டமும் கவலையுமடைந்துள்ளனர்.

## அரசாங்கத்தின் சாதனை

பொல்காவலை, திங்கள்

தேசிய அரசாங்கம் இந்த நாலரைவருட காலத்தில் கைத்தொழில் விவசாயம் ஆகிய துறைகளில் நாட்டைப் பெருமளவுக்கு முன்னேற்றியுள்ளது. 1970-ம் ஆண்டில் நாடு உணவைப் பொறுத்தளவில் 75 வீதம் சுயதேவையைப் பூர்த்தி செய்யுமென அரசாங்கம் எதிர் பார்க்கிறது.

பொல்காவலைப் பகுதியிலுள்ள விவசாயப் பயிற்சியாளர்களுக்குத் தராதரப் பத்திரங்களை வழங்கிய உணவமைச்சர் திரு. பண்டா அங்கு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வருமுன்னர் நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமடைந்திருந்ததெனவும், தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரே பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டதெனவும் குறிப்பிட்டார்.

...வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கிராமங்களின் முன்னேற்றத்திற்கு பாடசாலை சனசமூக நிலையங்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், நெசவு நிலையங்கள் கி. மு, சங்கங்களை ஆக்கி அவற்றின் மூலம் கிராம உயர்ச்சிக்காக உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## மீசாலையில் இசைவிழா

மட்டுவில், திங்கள்

மீசாலை தமிழிசை - சங்கத்தாரின் ஆதரவில் நடைபெறும் இசைவிழா இம்மாதம் 25, 26, 27-ம் திகதிகளில் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறவிருக்கிறது.

இம்மூன்றுநாள் இசைவிழாக்களிலும் இலங்கையில் முன்னணியில் நிற்கும் பல சங்கீத வித்துவான்கள் கலந்துகொள்வர்.

## மணமான பெண் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

நச்சுத்திராவகம் அருந்தியபின் ஆபத்தான நிலையில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட திருமணமான இளம் பெண் நேற்றுக்காலை மரணமானார்.

கொக்குவில் கிழக்கு நந்தாவில் பகுதியைச்சேர்ந்த சின்னக்குட்டி செல்லையா மனைவி ஈஸ்வரி நேற்றுக் காலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். மரணவிசாரணை நடைபெற்று வருகிறது.

## இன்று

யாழ்ப்பாணம், செவ்.

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் ஆட்சேபக்கூட்டமும் ஊர்வலமும் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் கூட்டம்யாழ். நகர மண்டபத்தில் நடைபெறும். பல தொழிற்சங்க பிரதிநிதிகளும் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

## உற்சவம்

பருத்தித்துறை, திங்கள்

ஊரெழு மேற்கு அந்திரானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இறுதிநாளான 26-ம் திகதி பகல் சங்காபிசேகமும், மாலை தீக்குளிப்பும் இரவு விசேட இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**FOR SALE**

Lister Engine - 6 H. P. RPM. 650 - Requires repairs. Inspection at TRADE & TRANSPORT CO. LTD. Offers invited.

1424

## விற்பனைக்கு

காணி:

நாவற்குழியில் பிரதான கண்டி வீதியில் 50 பரப்பு பாலத்திற்கும் அரசாங்க கட்டிடங்களுக்கும் இடையே பரப்பு ஒன்று ரூபா 1000. விபரங்களுக்கு: திருஞானஸ், வருமானவரி ஆலோசனையாளர், மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

1422

காணி:

யாழ்ப்பாணம், ஆனைப் பந்தி நாவலர் லேனில் வீடு கட்டுவதற்கான 3 பரப்புக் காணி. பட்டணத்திலிருந்து 1/2 மைல் தூரம். பஸ் பாதையிலிருந்து 40 யார் தூரம். விளம்பர இல. 1421, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம்.

1421

காணி:

யாழ்ப்பாணம் - கண்டி வீதியிலுள்ள புளியங்குளத்தில் 30 ஏக்கர் காணி வீடு கிணறு, மா மரத் தோட்டங்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வாமதேவன், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்.

1425

## தேவை

மலிவான வீடு, வயல், தரவை நிலம், தோட்டங்கள் ஏதாவது தேவை. எழுதுங்கள். வெஸ்டன், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம்.

1423

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**தாயின் மடியில்**

வல்வெட்டித்துறை
**ரஞ்சனு தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ஜெய்சங்கர்-எல். விஜயலக்ஷ்மி
நடித்த
**உயிர் மேல் ஆசை**

**REGAL** JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m
Poya, Prepoya 4 Shows
Andrey Hepburnr
Albert Finney
in
TWO FOR THE ROAD
(Adults only)

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Jules Buck-Peter O'toole
Production of
George Bernard Shaws
GREAT CATHERINE
(Technicolor)

## மெக்கானிக்கர்கள் தேவை

வலிகாமம் வடக்குப் பல நோ. கூ. ச. சமாசத்தால் அமைக்கப்படும் மின்தறி நிலையத்திற்கு இரண்டு மெக்கானிக்கர்கள் தேவை. கீழ்க் காணும் தகைமையுடையவர்கள் சமாசத்தின் நிர்வாகக் காரியதரிசிக்கு 5-10-69-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**தகைமைகள்**

1. வயது: 18-க்குக் குறையாதவராகவும், 30க்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

2. தராதரம்: ஜே.எஸ்.ஸி. ஆங்கிலம் ஒரு பாடமாகச் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3. அனுபவம்: அங்கீகரிக்கப்பட்ட அல்லது பிரபல்யமான ஒரு கராச்சில் மெக்கானிக்கராகக் கடமை புரிந்தவராக அல்லது தொழில் நுட்பக் கல்லூரித் தராதரப் பத்திரமுடையவராக இருத்தல்வேண்டும்.

4. நல்ல தேகாரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: தெரிவுசெய்யப்படும் இருவரும் சமாசத்தின் செலவில் கொழும்பில் பயிற்சிபெற அனுப்பப்படுவர். பயிற்சிக் காலம் முடிந்ததும் தொழில் கொடுக்கப்படும்.

நிர்வாகக் காரியதரிசி
வலி-வட. பல. நோ.
கூ. ச, சமாசம்
சுன்னுகம்.

1760

## கேள்வி விளம்பரம்

எழுவைதீவுக் கிராம சபைத் தலைவரால் 1969-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ந் திகதி (4-10-69) காலை 10-30 மணி வரை கடற்கரை வீதி வேலை, இரு தொட்டிகள் கட்டுதல் ஆகிய வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள், பத்திரப்பணமாக ரூ. 10/-ம் கேள்விப் பிணைப்பணமாக ரூ. 100/-ம் செலுத்தியதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 1-10-69 பி. ப. 4 மணிக்குப் பின்பு கொடுக்கப்படமாட்டாது.

(ஒப்பம்)
வி. சிவசம்பு,
தலைவர்
கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு,
21-9-69.

1764

81வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா-சுரேஷ் கம்பைன்ஸ்
**குழந்தைக்காக**
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!
மாதர்களுக்கு அரைக்கட்டணம்.

**யாழ் - வின்ஸர்**
தினசரி — 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன்
நடிக்கும்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 23—9—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நானையசந்தி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.

## சைவமகாநாடு

கோப்பாய், திங்கள்

கோப்பாய் திருவருள்தவநெறி மன்றத்தின் 3வது ஆண்டு நிறைவையொட்டிய சைவமகாநாடு எதிர்வரும் 26ம் திகதிமாலை கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டையொட்டி மன்றப் பிரசாரகரும் சங்கீத கதாப்பிரசங்க வித்வானுமாகிய பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்தசர்மாவின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி பட்டமளிக்கப்படும்.

சமயச் சொற்பொழிவுகள், பண்ணிசைக்கச்சேரி, இசைநிகழ்ச்சிகள் ஆகியன ...விழாவில் இடம்பெறும்.

## புதிய உத்தியோகத்தர்

...நல்லியடி மத்திய மகா
...வித்தியாலய உயர்தர வகு

## பாதயாத்திரை

கொழும்பு, திங்கள்

பண்டாரநாயக்கா நலன் நோக்குச் சங்கம் இம்மாதம் 25-ம் திகதி பாதயாத்திரை ஒன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளது. கொழும்பு விகார மகாதேவி பூங்காவிலிருந்து புறப்பட்டு கொறகொல்லையை இந்த பாதயாத்திரை சென்றடையும், பண்டாரநாயக்கா நினைவு தினத்தைக் கொண்டாடுவதில் ஒருபகுதியாக இது இடம்பெறுகிறது.

## விளையாட்டு மூலம் நல்லுறவை ஏற்படுத்தலாம்

உருத்திரபுரம், திங்கள்

உருத்திரபுரம் கிராம சேவையாளர் பிரிவு விளையாட்டுப் போட்டி திரு. கா. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கிய பின்னர் கிளிநொச்சி காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் பேசுகையில், விளையாட்டுப்போட்டிகள் மூலம்தான் நல்லுறவை ஏற்படுத்தலாமெனவும், உருத்திரபுரத்தில் சிறு

## சாவகச்சேரியில் காந்திவிழா

மட்டுவில், திங்கள்

எதிர்வரும் அக்டோபர் 3-ம் திகதி மீசாலையில்காந்தி நூற்றாண்டு விழா நடப்பதற்கான சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மீசாலை புகையிரதநிலையத்திற்கு அருகாமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவிற்கு சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி என். நவரத்தினம் தலைமை தாங்குவார். தவத்திரு குன்றக்குடி அடிகள் இதில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்ளுவார். மேலும் திரு. வி. பொன்னம்பலம், உப சபாநாயகர்திரு எம். சிவசிதம்பரம்உட்படப் பல பேச்சாளர்களும் கலந்து கொள்வர் என்றும், கதம்ப கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் எனறும் அறிவிக்கப்பட்டுள்ளது

...போகம் இல்லாதிருந்த ...போதிலும் சகலரும் பண உதவி புரிந்து விளையாட்டுப் போட்டியை சிறப்பாக நடாத்தியது பாராட்டிற்குரியது என்றும்குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எஸ். கிருஷ்ணபிள்ளை, ஆர். ஏகாம்பரம் ஆகியோரும் பேசினர்.

## வைத்தியசாலையில் நீர் தட்டுப்பாடு

மாத்தளை, திங்கள்

நீர் பற்றாக்குறையினால் மாத்தளை வைத்தியசாலை ஆய்வு கூட வேலைகளும், 'எக்ஸ்ரே' இலாகா வேலைகளும் தாமதமடைகின்றன. இத் தண்ணீர் பற்றாக்குறையினால் 'எக்ஸ்ரே' பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் நிலவி வரும் தண்ணீர்த்தட்டுபாட்டோடு வேறு பல வசதிக் குறைகளாலும் மேற்படி பகுதிகளிலுள்ள வேலைகள் ஸ்தம்பிதமாகின்றன எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் பிடவை விற்பனையாளர்களாகக் கடமையாற்றிய திருவாளர்கள் ஆ. திருநாவுக்கரசு, சி. நாகதேவன் ஆகிய இருவரும் தற்போது எமது சேவையில் இல்லாததால் அவர்களது செயல்கள் எவற்றிற்கும் நாங்கள் பொறுப்பாளிகளல்லரென்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,**
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

1762

10ல் 7 நபர்கள் கோறா தேநீர் அருந்துபவர்கள்.
மகிழ்ச்சி ததும்பும் 7 கோறா தேநீர் அருந்துவோரை கண்டுபிடியுங்கள்.
ரூபா 17,000/= ரொக்கப்பரிசாக பெறுங்கள்.
புறூக் பொன்ட் கோறா தேயிலை போட்டியில் 200க்கும் அதிகமான பரிசுகள்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினசரி — 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். -★ ஜெயலலிதா
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன்
நடிக்கும்

# புதியபூமி


ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த

# எங்க ஊர் ராஜா

அப்பல்லோ-11 டெக்னிக்கலரில் காண்பிக்கப்படும்.
Also Showing
APOLLO 11 in color-for 15 minutes,

கிங்ஸ்லி — பிளாஸா (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்நகர்)
2-30 6-30 -930
திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

# பக்த பிரகலாதா

[ஈஸ்ட்மன் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) — மைலன் (கொழும்பு) — ராஜ் (நீர்கொழும்பு)
ஆகிய திரைகளில்
ரி. ஆர். ராமண்ணாவின் டைரக்ஷனில் உருவாகி
ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஜரிஸ் மூவிஸாரின்

# நீயும் நானும்

(ஒப்பம்)
வி. சிவசம்பு,
தலைவர்
கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு,
21-9-69. 1764

## இ. போ. ச. அதிகாரிகளை கோருவர்

கோப்பாய், திங்கள்
கோப்பாய் — யாழ்ப்பாணம் இடைத்தூர சேவையில் ஈடுபட்டுள்ள இரட்டைத்தட்டு பஸ்களின் சேவையை நோயாளிகளின் நலனுக்காக கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரிவரை விஸ்தரிக்கும்படி கோப்பாய் பஸ் பிரயாணிகள் சங்கம் சம்பந்தப்பட்ட இ. போ. ச. அதிகாரிகளையும் கோப்பாய் எம். பி.யையும் கோரவுள்ளது.

...ரவில் இடம்பெறும்.

## புதிய உத்தியோகத்தர்

பருத்தித்துறை, திங்கள்
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர் மன்ற புதிய உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு எம் ஆர். முனுப். உபதலைவர்: திரு. எஸ். சங்கரலிங்கம், செயலாளர்: திரு. எஸ். கேசவராசா, உப செயலாளர்: செல்வி கே. இராசேஸ்வரி, தனாதிகாரி: திரு. கே ஸ்ரீ கிருஷ்ணதாஸ், பத்திராதிபர்: திரு. எம். ஜெயகரன் உபபத்திராதிபர்; செல்வி எஸ், சிவஞானசுந்தரி.

பத்துப் பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 7-ந் திகதி (23-9-69)
சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- இளமை நினைவுகள் நிழலாட்டம்போடும். புதிய இடத்து தொடர்பு பொருள் விரயத்தைக் கொடுக்கும். உணர்ச்சிப் போராட்டங்களுக்கும் இடம் உண்டு. உறவினர் மத்தியில் உற்சாகமுண்டு.

**ரிஷிபம்**- நலம்தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும். இன்று தாய்வழி ஆதரவும் தப்பாமல் கிடைக்கும். வாகனமுடையோருக்கு வரவில் திருப்தியும் இல்லத்தில் மகிழ்சியும் உண்டாம்.

**மிதுனம்**- தெளிந்த மனம், தெய்வகுருபத்தியுடன் தேடியதும் கிடைக்கும். பரோபகாரச்சிந்தை வளரும். பொதுப்பணியை நாடுவீர், பொதுமக்கள் ஆதரவும் தேடிவரும் இன்று.

**கடகம்**- மனக்கவலைக்கு இடமளிக்கும். கடமையில் தடைகள் ஏற்படும். மேல் அதிகாரிகளையும் பகைத்துக் கொள்ளநேரிடும். பெற்றோர் சுகத்துக்கும் இக்காலம் நல்ல காலமாகாது.

**சிம்மம்**- காதலர்களுக்கு கனகுஷியான தினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இல்லத்தில் இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். இன்று சுபதினம்.

**கன்னி**- அதிகாரப்போதையில் தவறுகள் நடக்கும். சகாக்களின் விரோதத்தைச் சம்பாதிக்கநேரிடும். வேண்டுவது பொறுமையே.

**துலாம்**- இதமான வாழ்வு. இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும். தந்தை வழி ஆதரவும் உண்டு.

**விருச்சிகம்**- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத்தொழில்முறைகளை மனமும் நாடும். நீண்ட பிரயாணத்திற்கு இடமேற்படும். இன்று நல்ல நாள்.

**தனுசு**- வசதிகள் பெருகும். வசந்தம் உள்ள நாள். எள்ளிச் சிரித்தவர்கள் இன்று அள்ளி அணைப்பதற்கு முன்வருவர். செய்தொழிலால் சிறப்பும் உண்டாம்.

**மகரம்**- குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும் திடீர்நடவடிக்கைகள் மேற்கொள்வதன்மூலம் நீங்கள் வருந்தநேரிடலாம். மேலதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

**கும்பம்**- பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவு விஷயத்தில் பிரியக்குறைவு தென்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாது இருப்பது நன்று. உடல்நலனில் அதிக கவனம்வேண்டும்.

**மீனம்**- திகைக்கவைக்கும் சம்பவங்கள் இன்று நடைபெறலாம். அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திருப்பமுடியும். கோஷ்டிச்சண்டையில் மாட்டிக் கொள்ளாதிருக்கவும்.





முதற் பரிசு ரூபா 3,000/- இரண்டாவது பரிசு 1,000/-
இதை விட 25 பரிசுகள் ரூபா 200/- விகிதம் 25 பரிசுகள் ரூபா 100/- விகிதம்
50 பரிசுகள் ரூபா 50/- விகிதம் மற்றும் 108 வியாபாரிகளுக்கான பரிசுகள்
ரூபா 25/- விகிதம் கவர்ச்சியாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புவோருக்கும்
அதிகக் கூடுதலான பிரவேசப்பத்திரங்களை அனுப்புவோருக்கும் விசேட
ரொக்கப் பரிசுகள்

இன்று அதிகமானோரால் விரும்பப்படும் தேயிலை கோரு தூள் தேயிலை என்பதில் சந்தேகமேயில்லை. அதன் புதுமையான நறுமணத்தை மக்கள் பெரிதும் அனுபவிக்கிறார்கள். சிக்கனமானது, ஏனெனில் ஒரு பக்கட் தேயிலையில் பல கோப்பை தேநீர் தயாரிக்கலாம். நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு மேலான பெறுமதி கொண்டதனால் மேலும் மேலும் பலர் கோரு தேயிலையையே உபயோகிக்கிறார்கள்.

மேலேயிருக்கும் படத்தில் 10 நபர்கள் தேநீர் அருந்துவதைப் பார்க்கிறீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 7 நபர்கள் கோரு தேநீர் அருந்துகிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியான திருப்தியான முகத்திலிருந்தே இதைக் கண்டு கொள்ளலாம். இப்பிரவேசப் பத்திரத்தில் கோரு தேநீர் அருந்துவோரைக் குறிப்பிடுங்கள். உதாரணமாக படத்திலுள்ள 1ம் எண் நபர் கோரு தேநீர் அருந்துபவரானால் பிரவேசப் பத்திரத்திலுள்ள முதல் வட்டத்தில் 1ம் எண்ணை இடுங்கள். இப்படி 7நபர்களின் எண்களையும் வட்டத்தில் நிரப்புங்கள். உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதி பின் வரும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

கோரு தூள் தேயிலைப் போட்டி,
த. பெ. இல. 832 கொழும்பு.

நீங்கள் பரிசு பெற்றால் உங்கள் வியாபாரிக்கும் பரிசு உண்டு. ஆகையால் பிரவேசப் பத்திரத்தில் உங்கள் வியாபாரியின் பெயர் விலாசம் அல்லது கடையின் பெயர் விலாசத்தைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப்பத்திரத்துடனும் ஒவ்வொரு கோருத்தூள் எந்த அளவு உறையானாலும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். விடைகளை அனுப்பும் தபால்உறையின் இடது பக்க மேல் பகுதியில் நீங்கள் அனுப்பும் பிரவேசப் பத்திரத்தின் தொகையையும் கோரு தூள் தேயிலைப்போட்டி எனவும் குறிப்பிடல் வேண்டும்.

ஒரே உறையில் யார் அதிகக் கூடுதலான பிரவேசப் பத்திரங்களை அனுப்புகிறார்களோ அவர்களுக்கே மேலதிக பரிசுகளாக ரூபா 300/- ரூபா 200/- ரூபா 100/- பரிசளிக்கப்படும்.

இப்போட்டியில் புறூக் பொன்ட் (இலங்கை) லிமிட், ஈ. பி. கிறீசி அன் கம்பனி லிமிட், ஷெனித் அட்வடைசிங் ஆகிய ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்ற முடியாது.

இப் போட்டி பற்றி எவ்வித கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

மத்தியஸ்தர்களின் முடிவே இறுதியானது.

முடிவுத் திகதி 1969ம் ஆண்டு அக்டோபர் 7ம் திகதி. பரிசு பெறுவோரின் பெயர்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்

முந்துங்கள்! இன்றே பங்கு பற்றுங்கள்!



பிரவேசப் பத்திரம்
○ ○ ○ ○ ○ ○ ○
உங்கள் பெயர்:- ..........
விலாசம்:- ..........
..........
உங்கள் வியாபாரியின் பெயர்:- ..........
விலாசம்:- ..........
..........
தெளிவாக எழுதவும்.

ZENITH
S 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொரக்கோ தலைநகரில் நேற்று ஆரம்பமான இஸ்லாமிய உச்சிமாநாடு

## அதேசமயம் சூயஸ்பகுதியில் இஸ்ரேலியர் தாக்குதல்

றபாத், செப். 22

மொரக்கோ தலைநகரான இங்கு இன்று முஸ்லிம் நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக உலகின் பலபாகங்களிலுமிருந்து இஸ்லாமியதலைவர்கள்வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

சுமார் 35 நாடுகள் கலந்து கொள்ளும் இந்த உச்சி மகாநாட்டில் குறைந்தது 15 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ள விருக்கிறார்கள். ஈரான் ஷா என்ஷா சவூதி அராபியமன்னர் பாய்ஸல், பாகிஸ்தானின் அதிபர் யாஹ்யாகான் முதலியவர்கள் ஏற்கனவே வந்துசேர்ந்துவிட்டார்கள். ஐக்கிய அரபுக் குடியரசின் சார்பில் அதிபர் நாஸர் சுகவீனம் காரணமாக கலந்துகொள்ள மாட்டார். உலகில் மூன்றாவதாக அதிக முஸ்லிம்களைக் கொண்ட இந்தியா, இந்த மகாநாட்டுக்கு அழைக்கப் படவில்லை.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள அல்லது இஸ்லாமியநாடாக இல்லாத நாடுகள் யாவும் இந்த உச்சி மகாநாட்டுக்கு அழைக்கப் பட்டுள்ளன.

ஜெருசலத்திலுள்ள அல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டது சம்பந்தமாகவும் ஜெருசலத்தை தொடர்ந்து இஸ்ரேல் தன்வசம் வைத்திருப்பது பற்றியும் ஆலோசிப்பதற்கும் அநுசம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி ஆராயவும் இந்த மகாநாடு நடத்தப்படுகின்றது.

எரிக்கப்பட்ட பள்ளிவாசலை ஆராய்ந்த கட்டிடக் கலை நிபுணர்கள்பள்ளிவாசல் உடனடியாக புனருத்தாரணம் செய்யப்படவேண்டும் என்று கருத்துவெளியிட்டிருக்கிறார்கள். மசூதியிலுள்ள இரு தூண்கள் வெடித்து இருப்பதாகவும், இவை உடனடியாக மாற்றப்படவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜெருசலத்தை சர்வதேச நகராகப் பிரகடனப்படுத்துவதற்கான எந்தத் திட்டத்தையும் இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளாது என்று இஸ்ரேலிய பிரதமர் திருமதி கோல்டாமெயர் கூறியிருக்கிறார்.

நேற்று சூயஸ்கால்வாயின் குறுக்கே இஸ்ரேலியர் விமானங்களைக்கொண்டு எகிப்து மீது தாக்குதல்நடத்தியதாக டெல் அவிவில் அறிவிக்கப் பட்டது. எகிப்திய நிலைகள் மீது தாக்குதல் நடத்த முயன்றவிமானங்கள் துரத்தியடிக்கப்பட்டதாக எகிப்தியர் அறிவித்துள்ளனர் ஜோர்டான் மீது நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் இஸ்ரேலியர் மூன்று குழந்தைகளைக் காயப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

# ஆமதாபாத்து இனக்கலவரம்: இறந்தவர் தொகை 94

புதுடில்லி, செப் 22

ஆமதாபாத்கலவரங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 94 வரை அதிகரித்திருக்கின்றது.

பம்பாய்க்கு வடக்கிலுள்ள இந்த நகரில் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்றது. இந்த நகரில் அமைதியைப் பாதுகாக்க ராணுவம் அழைக்கப்பட்டிருக்கின்றது. குழப்பங்களில் ஈடுபடுகின்றவர்களையும் கொள்ளையடிக்க முனைகின்றவர்களையும் சுட்டுத் தள்ளும்படி ராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றும் கலவரங்கள் வெடித்து நகரில் பதட்ட நிலைமை அதிகரித்தது. பல இடங்களில் ராணுவம் சுட்டதின்பின் அமைதி ஏற்பட்டது. ஆமதாபாத்தின் தலை...

ஒரு கோயிலைச் சேர்ந்த பசுக்களை மேயவிட்டபிறகு பலர் அப்பசுக்களை கோயிலுக்கு திருப்ப ஓட்டி வந்த ... கோயில் அருகே பிரார்த்தனை செய்துகொண்டிருந்த மற்றொரு சமூகத்தினர் தங்கள் பக்கமாக பசுமந்தையை ஓட்டி வந்ததற்கு ஆட்சேபம் தெரிவித்தனர் என்றும் அப்போது வாய்ச் சண்டையையடுத்து பசுக்களை ஓட்டி வந்தவர்கள் கற்களினால் தாக்கப்பட்டனர் என்றும் அதில் 11 பேர் காயமடைந்தனரென்றும் இதனையடுத்துபலபகுதிகளிலும் கலவரம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து அக் கோயில் மஹந்த் உண்ணாவிரதமிருந்தார் ... கோஷ்டி அவரைச் சந்தித்து...

### சிறிமா நம்பிக்கை

கோட்டை, திங்கள்

'எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சி நிச்சயமாக 75 ஸ்தானங்களில் வெற்றியீட்டி சமஷ்டிக் கட்சியினரின் உதவியின்றியே அரசாங்கம் அமைக்கும். ஐக்கிய தேசியக் கட்சியினர் செய்தது போன்று நாம் அவர்களுக்குப்பின் செல்ல வேண்டியதில்லை.'

எதிர்க்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா தம்பதேனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய தேசியக் ...

# சங்கானை கொலை வழக்கில் மூன்று எதிரிகளும் விடுதலை

கோட்டை, திங்கள்

சங்கானை சாதிக்கலவர வழக்கில் எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர். சங்கானையைச் சேர்ந்த பாலன் பசுபதி, வன்னியன் சின்னையாதம்பி, ஆறுமுகம் தியாகராசா ஆகிய மூவரும் வல்லிபுரம் செல்லமுத்து என்பவரை 1969 ம் ஆண்டு ஜனவரிமாதம் 14-ம் திகதி சுட்டுக் கொலை செய்ததாக இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இவ்விசாரணையை யாழ்ப்பாணம் அசைஸ் நீதிமன்றத்தில் நடத்தாமல் கொழும்பில் நடத்துமாறு எதிரிகள் அப்பீல் செய்ததைத் தொடர்ந்து இவ்வழக்கு கொழும்பு அசைஸ் கமிஷனர் திரு. ரி. பி திஸநாயக்கா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது. சிறுபான்மைத் தமிழர் என்றகாரணத்தால் தங்களுக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படாமல் போகலாம் என்று எதிரிகள் தங்களது அப்பீலில் தெரிவித்து கொழும்பில் விசாரணையை நடத்தும்படி கேட்டிருந்தனர்.

வழக்கறிஞர்களின்குறுக்கு விசாரணையின் பின்னர் வழக்கு தொடர்ந்து நடைபெறுகையில் சாட்சிகளில் முரண்பாடு காணப்பட்டதையடுத்து ஜூரிசபையினர் நீதிபதியிடம்தெரிவித்தனர். அதன்மீது எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்

# 'மாமனுருக்கு விறகினால் எறிந்தேன் என்பது பொய்'

## விவாகரத்து வழக்கில்பெண்சாட்சியம்

மட்டுவில், திங்கள்

''தோட்டக் காரன் வேலுவுடன் போயிருந்து நான் பேசுவது என்று அவர் கூறுவதும், வயோதிபரான எனது மாமனுருக்கு விறகு கட்டையால் எறிந்தேன் என்று கூறுவதும் சுத்தப் பொய்'' என விவாகரத்து வழக்கில், இராசமணிஎன்ற இளம் பெண் கூறினார் இந்த வழக்கில் கிளிநொச்சியைச் சேர்ந்த பாலாசாமி என்பவர் தமது மனைவி இராஜமணியிடமிருந்து விவாகரத்துக்கோரி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை மாவட்ட நீதவான் திரு ஸி.எம். தருமலிங்கம் விசாரணை செய்தார். விசாரணையின் போது, இராசமணி தொடர்ந்து கூறியதாவது:-

''நான் இவரைக் கல்யாணம் செய்து 10 வருடங்களின் பின்தான் எமது விவாகப் பதிவு நடைபெற்றது. அதுவரையும், நாம் கணவன் மனைவியாக, தெல்லிப்பளையிலும் சங்கானையிலும் இருந்தோம். நான் அவரை எந்த விதத்திலும்வெறுக்கவில்லை.

அவர்தான் என்னை அம்மன் கோவிலுக்கு வரும்படி கூ... ...டுப்போனார். ... என்பவருடன் கூடிக் ...

### நகர் காவலர்கள் சேவை

யாழ்ப்பாணம், செவ்

பருத்தித்துறை நகரைக் கடந்த 7 மாதங்களாக நான்கு இரவுக் காவலர்கள் கண்காணித்து வருவதால் குறிப்பிட்ட இக்கால எல்லைக்குள் ஒரு களவுதானும் நடைபெறவில்லையென பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

நகர் காவலர்கள் பொலிசாரின் கண்காணிப்புடனேயே கடமையாற்றுவதால் களவுகள் இப்பகுதியில் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிலர் பொலிஸ் தலைமை அலுவலகத்துக்கு அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரில் நடைமுறையிலிருப்பது போல கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வவுனியா ஆகிய இடங்களிலும் ...ர்க் காவலர்களை அமைக்க பொலிஸ் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். (கா. நி)

### தலா ஆயிர...

இந்தியரை வெறுக்கும் சிங்களவர்

# இந்தியாவில் பிறந்த புத்தரையும் வெறுப்பார்களா?

## அறிஞர் இராகவன் கேள்வி

யாழ்ப்பாணம், செவ்

''தமிழன் கதை உயிருள்ள கதை தமிழன் கலை உயிருள்ள கலை. தமிழன் தெய்வங்கள் உயிருள்ள உணர்வூட்டும் தெய்வங்கள். நமது கலைமீது நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். அது நம்மை வாழவைக்கும்.''

நுண்கலைச் செல்வர் பேரறிஞர் அ. இராகவன் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தினர் நேற்று முன்தினம் இரவு, இலக்கிய மன்றத்தின் ஆதரவில் திரு. இராகவனுக்கு பொது வரவேற்பொன்று அளித்தார்கள். விழாவுக்குத் தலைமைவகித்த யாழ். நகர முதல்வர், அறிஞர் இராகவனின் ஆராய்ச்சித் திறன் பற்றி எடுத்துக்கூறினார்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு அறிஞர் இராகவன் நன்றி தெரிவித்துப் பேசியபோது சொன்னதாவது:

''நாடகக் கலை, நடனக் கலை, கட்டடக் கலை, ஓவியக் கலை ஆகிய சகலதும் தமிழன் வழிவந்த கலைகள். இவற்றைப் பேணிப் பாதுகாக்கவேண்டியது தமிழன் பெரும் கடமை.

சகல சமயங்களும் சைவ சமயத்திலிருந்தே வந்தன சகல சமயங்களுக்கும் ஆதியான சமயம் சைவ சமயம் தான் என்பதை யாருமே மறக்கமுடியாது.

சிங்கள மக்களைப் பற்றி விரிவாகவும், அழகாகவும் எழுதியவர் திரு. ஆனந்தக் குமாரசாமிதான் இந்தியரைச் சிங்களவர் வெறுக்கலாம். ஆனால் இந்தியாவில் அவதரித்த புத்தர் பெருமானை ஈழம்வாழ் சிங்கள மக்கள் வெறுக்க முடியுமா? முடியவே முடியாது.

எந்தச் சமயத்தை எடுத்து எந்த மொழியை எடுத்து எப்படித்தான் ஆராய்ந்தாலும் அங்கு தமிழன் கதை தான் வரும் இது தவிர்க்க முடியாததுமாகும்.

சிவனைக் கண்டவன் இராவணன்தான். ஆனால் இன்று இந்த நாடு யாழ் கொடியை மறந்தது மட்டுமல்லாது, தமிழ்க் கொடியையும் மறந்துவிட்டது.

தமிழ்நாடு பெரும் கலைஞரைப் பெறவில்லை. ஆனால் ஈழந்தான் அந்தப் பாக்கியத்தைப் பெற்றது. யாராவது புலவர் வந்தால் அவர் மீது குற்றம் கண்டுபிடித்து, அவரை மட்டந்தட்டுவதை நாம் ஒழிக்கவேண்டும். யாழ் நூல் தந்த சுவாமி விபுலானந்தருக்குகூட ஆசானாக இருந்தவர் திரு. ஆனந்தக்குமாரசாமியே.

அமெரிக்கனோ, ரஷ்யனோ சந்திர, சூரியர் பற்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தெரிந்துவைத்திருக்கவில்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரகணங்கள் பற்றியும், கோள்கள் பற்றியும், வான சாஸ்திரங்கள் பற்றியும் அறிந்துவைத்திருந்தவன் தமிழன்தான்.

ஒன்றும், அரையும், காலும் தான் ஆங்கிலேயனுக்குத் தெரிந்ததாகவிருந்தது ஆனால் அரைக்கால் பற்றியும், அரை அரைக்கால் பற்றியும், அணு பற்றியும் கணிதத்தில் திறன்பெற்றுப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்து வைத்திருந்தவன் தமிழன்தான்.

கட்டுமரம் தொடக்கம் கப்பல் வரை முதலில் கடலில் ஓடவிட்டுப் பெருமை பெற்றவன் தமிழன்தான். ஆங்கிலேயர் எமது நாட்டுக்கு வந்தபின்னரே கப்பல் கட்டப் பழகினார்கள். இன்று ஆங்கிலேய நாட்டில் 'திருகோணமலை' என்ற பெயருடன் 150 வருடத் தொன்மை வாய்ந்த கப்பல் ஒன்று சேவையிலிருப்பது இதற்குச் சான்று பகரும்

சென்ற இடமெல்லாம் வெற்றிக்கொடி நாட்டியவன் தமிழன். தமிழன் கலை பெற்ற சிறப்பு வேறெந்த நாடும் பெறவில்லை. உலக நாடுகளில் நமது நாட்டியக் கலைக்குள்ள மதிப்பு இன்று கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது கலைகளை, எமது வாழ்க்கைக்காக நாம் பயன்படுத்தவேண்டும். அது எமக்குப் பெரிதும் உதவும்.''

கலைப்புலவர் திரு. நவரத்தினம் தென் இந்தியச் சிற்பக் கலைபற்றிஎழுதியமை பற்றி இங்கு பேசுகையில் குறிப்பிட்ட திரு. க. சொக்கன் தமிழ்க்கலைகளின் தனிச் சிறப்பு பற்றியும் எடுத்துக் கூறினார்.

திரு. தேவன் யாழ்ப்பாணம் பேசுகையில் தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சிக்கு இதுபோன்ற ஆராய்ச்சிகள் தேவையென்று சொன்னதோடு திரு. இராகவனின் விடாமுயற்சியையும்பாராட்டினார்.

திரு. கே. பி. ஹரன், வழக்கறிஞர் மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் அறிஞர் இராகவனின் ஆராய்ச்சித் திறனைப் பாராட்டிப் பேசினார்கள். (கா. நி)

### ஜெமினிகணேஷ் ரசிகர் மன்றம்

கொழும்பு, ஞாயிறு

ஜெமினி கணேஷ் ரசிகர் மன்றம் அதன் தற்காலிக தலைவர் திரு. எம். எஸ். மணி பாபு தலைமையில் நடைபெற்றது. நடப்புவருட மன்ற நிர்வாகிகள் தேர்வில் மன்றத்தின் இவ்வருட தலைவராக திரு. பீ எம். ஏ. சலாவுத்தீனும், செயலாளராகதிரு எம். லக்ஷ்மணகுமாரும், பொருளாளராக திரு. எச். ஏ. எம். ஜிப்ரியும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஐவர் அடங்கிய செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மன்றப் பணிமனையில் ஜெமினி கணேஷனின் பெரிய படம்ஒன்றை திறந்து வைத்ததுடன் தற்பொழுதுள்ள வாசக சாலையைத் திருத்தி அமைத்து பெரிய முறையில் இயங்க வைக்க வேண்டும் என்றும், தீவு முழுவதும் ஜெமினி கணேஷ் ரசிகர் மன்றத்தின் கிளைகளை விஸ்தரிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றும் கலவரங்கள் வெடித்து நகரில் பதட்ட நிலைமை அதிகரித்தது. பல இடங்களில் ராணுவம் சுட்டதின்பின் அமைதி ஏற்பட்டது. ஆமதாபாத்தின் தலைநகர்ப் பகுதிகளிலும் இப்பொழுது அமைதி நிலவுகின்றது.

மாநில முதன்மந்திரி கலவரம் நடந்த இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்திருக்கிறார்.

ஆமதாபாத்தில் வியாழனன்று கலவரங்கள் ஆரம்பித்தன,

நிலைமையை சமாளிப்பதற்காக பாவ்ராஷ்டிராவிடம் ரிசர்வ் பொலிஸ் உதவியை குஜராத் அரசாங்கம் கோரியுள்ளது. மத்திய அரசிடமும் உதவி கோரப்பட்டுள்ளது..

நகரம் பூராவிலும் கல்லூரிகள் பள்ளிகள் அனைத்தும் இரண்டாவது நாளாக மூடப்பட்டன.

நகரம் பூராவிலும் முனிசிப்பல் பஸ்கள் ஓடவில்லை, ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லாத பகுதிகளில் இங்கும்அங்குமாக நேற்றிரவு சம்பவங்கள் நடந்ததையடுத்து அப்பகுதிகளில் கூட இரும்புத் தொப்பியணிந்த பொலிசார் மக்களை இஷ்டத்துக்கு நடமாட அனுமதிக்கவில்லை.

நகரம் பூராவும் வெறிச்சேடி கிடக்கிறது. எரிக்கப்பட்ட கடைகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் புகை வெளிப்படுகிறது. மார்க்கெட் ரோட்டுகள் பூராவும் ஒரே கற்கள்மயம், மேலும் கடைகளிலிருந்து பண்டங்கள் வெளியே எறியப்பட்டு தீவைத்து எரிக்கப்பட்ட சாம்பல் குவியல் குவியலாக காணப்படுகிறது.

பொலிசாரும் தீயணைக்கும் படையினரும் நிலைமையைச் சமாளிக்க அரும்பாடு பட்டனர்.

றும் இருகளையடுத்துபலபகுதிகளிலும் கலவரம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து அக்கோயில் மஹந்த் உண்ணுவிரதமிருந்தார் ஒரு தூது கோஷ்டி அவரைச் சந்தித்து சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்த பின்னர் மஹந்த் உண்ணுவிரதத்தை வாபஸ் பெற்றார்.

முதன்மந்திரி ஹிரேந்திர தேசாய் மத்திய உள்துறை மந்திரி சவானுடன் டெலிபோனில் பேசினர். நகரில் உள்ள நிலைமையை அவர் எடுத்துரைத்தார்.

பின்னர் பிரதமர் இந்திரா காந்தியும் முதன்மந்திரியுடன் டெலிபோனில் பேசும்போது நிலைமையைப்பற்றி விசாரித்தார். பனுஸ்கந்தா தலைநகரான பலான்பூரில் மோதல் தீவைப்பு சம்பவங்கள் நடந்ததாக இங்குகிடைத்ததகவல் கூறுகிறது.

## 20 பேருக்கு மேல் பலியாகினர்

மெக்ஸிகோசிட்டி, செப்டம்பர் 22

'போவிங்' விமானம் ஒன்று மெக்ஸிகோவில் அவசரமாகத் தரை இறங்க முயற்சிக்கையில் ஏற்பட்ட விபத்தில் குறைந்தது 20 பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள், மேலும் பலர் சாகக்கூடும் என்றும் அஞ்சப்படுகின்றது. 111 பிரயாணிகளோடும்,ஏழு விமானப் பணிப்பெண்களோடும் புறப்பட்ட இந்த விமானத்தில் ஏதோ கோளாறு தென்பட்டதால் விமானி அதனை அவசரமாககீழேஇறக்குவதற்கு முயற்சிசெய்தார்.

திருமதி பண்டாரநாயக்கா தம்பதேனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்ததேர்தல்முடிந்தவுடன் தமிழரசுக் கட்சி உதவி செய்யாவிடில் ஒருபொழுதும் அரசாங்கம் அமைத்திருக்க வியலாது எனக் கூறினர்.

## தங்கம்மோசடி: எதிரி குற்றவாளி

மல்லாகம், திங்கள்

போலித் தங்கம் வழங்கி ரூபா 8500 மோசடி செய்ததாகத் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணை முடிவில் எதிரிகள்இருவரையும் குற்றவாளிகளாகக் கண்ட நீதிபதி தீர்ப்பு வழங்குவதை அடுத்த மாதம் 5-ம் திகதி வரை ஒத்திவைத்து எதிரிகளை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்

யாழ்ப்பாணம் பொலிசார் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த கே. எஸ். பரம்சோதி என்பவரிடம் ஏமாற்றி மோசடி செய்ததாக எஸ். ஐ பெஞ்சமின், பீ. சண்முகம் ஆகிய இருவர் மீதுகுற்றஞ்சாட்டி இவ்வழக்கை மல்லாகம் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்தனர்.

பூநகரியில்

## உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்படும்

பூநகரி, ஞாயிறு

பூநகரிமக்களின்குறைகளை அறியும்பொருட்டும் உள்ளூராட்சி வாரம் கொண்டாடுவதுபற்றி ஆராயும்பொருட்டும் பூநகரி கிராமசபை மண்டபத்தில் சபைத்தலைவர் திரு வை. வல்லிபுரம் தலைமையில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டது. இம்மகாநாட்டில் பல முற்போக்கு விஷயங்கள் ஆராயப்பட்டன உள்ளூராட்சி அமைச்சர் வேண்டுதலின்படி உள்ளூராட்சி வாரத்தின்போது ஓர் ஆயுள்வேத வைத்திய சாலை மருந்துக்களஞ்சியம் கட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்குரிய நிதியை சீட்டிழுப்பு மூலம் சேர்ப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கு ஒரு குழுவும்தெரிவுசெய்யப்பட்டது இக்குழுவுக்கு திரு. வை. வல்லிபுரம் தலைவராகவும் திரு. பொ. விநாயகமூர்த்தி உபதலைவராகவும், திரு. பொ. தில்லைநாதன் செயலாளராகவும், திரு. வ, அரியரத்தினம் தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். ஏழு பேர் கொண்ட ஒரு கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

ம். நான் அவனை எந்த விதத்திலும்வெறுக்கவில்லை.

அவர்தான் என்னை அம்மன் கோவிலுக்கு வரும்படி கூறி, என் தாய் வீட்டில் விட்டுப்போனார். அவர் நடராஜா என்பவருடன் கூடிக் கொண்டுப்போனார். நான் தோட்டக்கார வேலுவுடன் கதைப்பதுமில்லை; மாமாவிற்கு விறகு கட்டையால் எறியவுமில்லை கிளிநொச்சிக் குளத்திற்கு குளிக்கப் போவது உண்மைதான், வேறும் பெண்களுடன்தான் போவேன். அதுவும் நமது வீட்டுக்கிணற்றில் தண்ணீர் இல்லாதபடியால் தான்வேறிடத்திற்குக் குளிக்கச் சென்றேன். நான் அவருடன் கூடி வாழவே விரும்புகிறேன்.''

நீதவான் மேல் விசாரணையை அடுத்த மாதம் 14ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

வடபகுதியில்

## தென்னிலங்கை சிரமதானத் தொண்டர்கள்

பருத்தித்துறை, திங்கள்

வடபகுதியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த பாடசாலைகளையும் யிப் பாடசாலைகளுக்கண்மையிலுள்ள பகுதிகளையும் சீர்கருத்தும் நோக்கத்துடன் சில இலங்கை பௌத்த பாங்கிரசைச் சேர்ந்த ஐம்பது தொண்டர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். தற்போது புத்தூர் பௌத்த பாடசாலைக் கட்டட வேலைகளில் ஈடுபட்டுள்ள இவர்கள் அடுத்து அச்சுவேலி கரவெட்டிப் பகுதிகளிலும் அல்வாயிலுமுள்ள பௌத்த பாடசாலை விஸ்தரிப்புவேலைகளில் ஈடுபடவிருக்கின்றனர். கரவெட்டியில் சிறுபான்மைத் தமிழருக்கென இருக்கும் குளங்களைச் சுத்திகரிக்கும் பணியிலும் இவர்கள் ஈடுபடவிருப்பதாகத் தெரிகிறது. இவர்களுடன் உள்ளூர் இளைஞரும் இப்பணிகளில் ஈடுபடுவதுடன் இவர்களின் சகல வசதிகளையும் ஒழுங்கு செய்துமுள்ளனர். இவர்கள் கடைசியாகப் பூநகரிப் பகுதிக்குச் செல்லவிருப்பதாகத் தெரிகிறது

## சினிமாத்தியேட்டரில் குண்டு வீச்சு

அநுராதபுரம், திங்கள்

சில நாட்களுக்கு முன் அநுராதபுரத்திலுள்ள ஒரு தியேட்டரில் படம் ஓடிக்கொண்டிருக்கையில் குண்டு வீசப்பட்டது.

மேற்படி சம்பவத்தினால் ஒருவருக்குக்காயம் ஏற்பட்டு உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இது பற்றி பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

ஆகிய இடங்களிலும் ... காவலர்களை அமைக்க பொலிஸ் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். (கா. நி.

## தலா ஆயிரம் ரூபா பிணை

மல்லாகம், திங்கள்

சித்தங்கேணி மண்வெட்டித் தாக்குதல் சம்பவம்குறித்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான குலசூரியர், கனகசபை, சேதுநாதன் ஆகிய மூவரையும் தலா 1000ரூபா பிணையில் செல்ல அனுமதித்த மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எஸ். ஆனந்தகுமாரசாமி மீண்டும் மூன்று நபர்களையும் அடுத்த மாதம் 4ம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

காயமடைந்தவர் தற்போது யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். சங்கானைப் பொலிஸார் மேலும் விசாரணை செய்கின்றனர்.

## அத்திபாரக் கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண மாநரசபையின் சேரி ஒழிப்புத்திட்டத்தின்படிபுதிய வீடமைப்புத் திட்டத்திற்கான அத்திபாரக் கல் இம்மாதம் 24-ம் திகதி நாட்டப்பட விருக்கிறது.

இவ் விழாவைத் தொடர்ந்து யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் சொற்பொழிவாற்றுவார்கள் யாழ்ப்பாணமேயர் திரு. எஸ் நாகராஜா அத்திபாரக் கல் நாட்டுவார்.

## அமைச்சர் பிரேமதாஸா அடிக்கல் நாட்டினர்

மாத்தறை, திங்கள்

சமீபத்தில் மாத்தறைப் பகுதிக்கு விஜயம் செய்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாஸா கம்புறுபிட்டியாத் தொகுதியில் புதிய பாலமொன்றையமைப்பதற்கு அடிக்கல் நாட்டினர்.

இந்தப் பாலத்தைக்கட்டி முடிக்க ரூபா 45,000 செலவாகுமெனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப்பாலவேலைகள் பூர்த்தியானதும் இப்பகுதியிலுள்ள பின் தங்கிய கிராமங்கள் அபிவிருத்தியடையுமென அடிக்கல் நாட்டிய அமைச்சர் தெரிவித்தார்.

தான் வரும் இது தவிர்க்க முடியாததுமாகும்.

சிவனைக் கண்டவன் இராவணன்தான். ஆனால் இன்று

கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

எமது கலைகளை, எமது வாழ்க்கைக்காக நாம் பயன்

தரிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆஸிய நாடுகளுக்கு யு. எஸ்.

# ராணுவ உதவியைக் கட்டுப்படுத்த வேண்டும்

## செனடர் மென்ஸ் பீல்ட் வற்புறுத்து

நியூயோர்க், செப். 22

ஆசிய நாடுகளுக்கு இராணுவ உதவிகள் அளிப்பதை அமெரிக்கா கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அமெரிக்க செனட்சபையில் ஜனநாயகக் கட்சித் தலைவர் செனட்டர் மென்ஸ்பீல்ட் அதிபர் நிக்சனை வற்புறுத்தியிருக்கிறார்.

அதிபர் நிக்ஸனின்கோரிக்கையின் பேரில் திருமென்ஸ்பீல்ட் தென்கிழக்காசிய நாடுகளில் விஜயம் மேற்கொண்டுவிட்டு இப்போது அமெரிக்கா திரும்பியிருக்கிறார்.

ஆசிய நாடுகளில் உள்ள அமெரிக்க அதிகாரிகளைச் குறைக்கவேண்டும் என்றும் ராணுவ உதவிகளை கட்டுபடுத்த வேண்டுமென செனட்டர் மென்ஸ்பீல்ட்கூறியிருக்கிறார்.

லாவோஸில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தென் வியட்னாம் பிரச்னைகளில் சிக்கிக்கொண்டதுபோல் ஆகிவிடும் என்று அவர் எச்சரித்தார்.


# ஆம்-இது உண்மை

இலங்கையின் பெரிய விவசாய மாவட்டங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இப்பொழுது டேவிட் பிரவுண் ட்ராக்டர்களையே விரும்பத் தலைப்பட்டுள்ளன.

# என்?

1. ஏனெனில் டேவிட் பிரவுண் ட்ராக்டர்தான் பாதுகாப்பான நிச்சயமான முதலீடு என்பதை அவர்கள் கண்டுகொண்டுவிட்டார்கள்.
2. நெல்வயல்களில் இந்த ட்ராக்டர்கள் ஆற்றிய நிருபணச்சேவை, கூடுதல் ஆதாயத்தைப் பெற விவசாயிகளுக்கு உத்தரவாத மளித்திருக்கிறது.
3. நம்பிக்கை வாய்ந்த உழவு இயந்திரமொன்றை ஈற்றில் அவர்கள் கண்டு பிடித்துவிட்டார்கள்.
4. நீண்டகால சேவைக்கும், நம்பிக்கைக்கும் கீர்த்தி பெற்ற கம்பெனியான ரோலன்ஸ் ஸ்தாபனத்தின் ஆதரவு டேவிட் பிரவுனுக்கு கிடைத்துள்ளது.
5. ஒவ்வொரு டேவிட் பிரவுண் ட்ராக்டர் விற்பனையோடும் ரகவாரியான உப-உறுப்புகள் வழங்கப் படுகின்றது. அத்தோடு இவற்றின் உப-உறுப்புகள் எப்பொழுதும் கிடைக்கும் என்பதற்கு-உத்தரவாதமுண்டு. நாடெங்கும் திறமான விற்பனைக்குப் பின்னர் சேவையும் செய்து கொடுக்கப்படுகிறது.

உங்கள் டேவிட் பிரவுண் வியாபாரியை இன்றே சந்தியுங்கள்:-

ஏ. எம். எம். கல்தான்
டிவிஷன் - 1, காத்தான்குடி.

யாழ்ப்பாணம் கூட்டுறவு ... கசாலை லிமிட்டெட்
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பேர்ட்லண்ட் இண்டஸ்ட்ரீஸ்
பவுர் ஹவுஸ் ரோட், திருகோணமலை.




D B

HOUSE OF R ROWLANDS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மறுபிறவியை நான் விரும்பவில்லை. மறுபிறவி எடுக்க நேர்ந்தால் தீண்டத்தகாத இடத்தில் பிறக்கவே விரும்புகிறேன். அப்போதுதான் தீண்டத்தகாதவர்களுக்கெதிரான கொடுமைகளை நான் பகிர்ந்துகொள்ளமுடியும். — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதிமாதம் 7-ந் திகதி (23-9-69)


## மகாத்மா நூற்றாண்டுவிழா

உலகிலே பல நாடுகளிலும் மகாத்மா காந்தியின் நூற்றாண்டு ஜயந்திவிழா இப்போது உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதில் சிறப்பாக பிரிட்டிஷ் அரசாங்கமும் பொதுமக்களும் மகாத்மாவிடம் காட்டும் மரியாதையும் பக்தி சிரத்தையும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

பிரிட்டிஷ் தலைவர்களில் சிறந்தவரும் பிரமுகருமான மவுண்பேட்டன் பிரபுவின் தலைமையிலே செல்வாக்குள்ள ஒரு குழுவினர் பிரிட்டனில் இவ்விழாவினைத் தக்கபடி கொண்டாட எல்லா ஏற்பாடுகளும் செய்து வருகின்றனர். பிரிட்டிஷ் பிரதமரான ஹெரால்ட் வில்ஸன், மகாத்மாகாந்தியின் உருவச்சிலையை சமீபத்தில் லண்டனிலே திறந்துவைத்தார். அச்சமயத்திலே அவர் மகாத்மாவின் அருமை பெருமைகளைப் பற்றி புகழ்ந்து பேசிய கருத்துக்கள் முதல்தரமானவை, சரித்திரத்தில் பதியத்தக்கதுமாகும். மகாத்மாவின் உருவமடங்கிய ஒரு தபால்முத்திரையை பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்டுத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டது. இத்துடன் மகாத்மாவின் குணாதிசயங்களைப் போற்றியும், சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் பலப்படுத்தவும், பிரிட்டனிடம் அவர் காட்டிய நட்பையும் அவரது மகத்தான செல்வாக்கையும் விவரித்து, ஒரு தீர்மானத்தை பிரிட்டிஷ் பார்லிமெண்ட்சபை நிறைவேற்றியுமுள்ளது.

அச்சபையில் நிறைவேறிய தீர்மானம் வருமாறு: மகாத்மாவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இச்சமயத்திலே அவர் இந்தியாவின் மக்களுக்கும் உலகுக்கும் செய்துள்ள மகத்தான தொண்டையும் அவரது எளிய வாழ்க்கையையும் பிறர் உணர்ச்சிகளை அவர் விருப்பத்தையும் இந்தச் சபை பாராட்டி எழுத்து மூலம் பதிவுசெய்ய விரும்புவதுடன், பிரிட்டனிலே காந்தி நூற்றாண்டைக் கொண்டாடும் கமிட்டிக்கு பலத்த ஆதரவளிக்க வேண்டுமென்று இச் சபை வற்புறுத்துகிறது.

இவ்விதம் ஒருவரைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியது பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சரித்திரத்திலே மட்டுமன்றி எந்த நாட்டு பார்லிமெண்டிலும் மிகவும் அபூர்வமாகும். இதை இலங்கை பார்லிமெண்டும் பின்பற்றுவது மிகப் பொருத்தமாகும். இலங்கையின் இரு பார்லிமெண்ட் சபைகளும் மகாத்மா மீது இந்நாட்டின் மேலான மதிப்பையும் அஞ்சலியையும் பதிவு செய்யவேண்டும். மகாத்மா மிக உன்னதமான சர்வதேசிய வாதி மட்டுமல்ல. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நட்புமுறையான ஒத்துழைப்பு ஏற்படவேண்டுமென்பதிலும் அதிகசிரத்தை காட்டினார்.

இந்தியாவிலே அந்நிய ஆதிக்கத்தை நீக்க மகாத்மா காந்தி செய்த முயற்சிகள், இலங்கைக்கும் அரசியல் சுதந்திரம் கிடைப்பதற்கான காரணங்களில் ஒன்றாகுமென்பதை நாம் உணர்வோம். ஆகவே இவ்வித அபூர்வமான ஒரு மனிதருக்கு நாட்டின் மரியாதையை நமது ஆட்சிமன்றம் ஒரு தக்க தீர்மானத்தின் மூலம் பதிவுசெய்யவேண்டியது எல்லாவகையிலும் சிறந்த காரியமாகும். உலகத்திலே இவ்விதமானவர்களைப் பார்ப்பது சுலபமன்று. சந்திரனுக்கு அமெரிக்க விண்வெளிவீரர்கள் சென்றது, மனித சரித்திரத்தில் மிகப் பெரிய சம்பவமென்று கூறுகின்றனர். இதே சமயம் மனிதப் பண்புகளிலே மிக மிக உச்சக் கட்டத்தை இக்காலத்திலே மகாத்மாகாந்தி

# ஓவியக்கலை ஆர்வம் இந்தியாவில் குறைந்துள்ளது

## யாழ்ப்பாணத்தில் தமிழக அறிஞர் ராகவன்

யாழ்ப்பாணம், செவ்வாய் "தமிழ் நாட்டிலும் சரி இந்தியாவிலும் சரி டாக்டர் ஆனந்தக்குமாரசாமிக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. இந்தநாட்டிலிருந்து கலை வளர்ப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்தியாவிலும் அவரை பிரிட்டிஷ் அரசாங்கமும் ஆதரிக்கவில்லை. அமெரிக்க அரசாங்கம் அவரை அழைத்து ஆதரித்து உதவி செய்தது. அவர் ஓவியம் சிற்பம், கட்டடக்கலை, மண்கல், சேலை, அணிகலன்பற்றியெல்லாம் எழுதியிருக்கிறார். இவர் 520 நூல்கள் எழுதியிருக்கிறார் இந்தக்காலத்தில் இவரைப்போல் எழுதியவரை எங்குமே பார்க்கமுடியாது"

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் தமிழக அறிஞர் திரு. ஏ. இராகவன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு இராகவன் மேலும் கூறியதாவது: டாக்டர் ஆனந்தகுமாரசாமி எல்லாத் துறையிலும் படித்திருந்தார் எல்லாவற்றிலும் அவர் மேதை சிங்களக்கலைபற்றிய நூல் ஒன்றும் அவர் எழுதியிருக்கிறார். அந்த நூலை ஒரு காலத்தில் ஆயிரம் ரூபாவிற்குப் பெற முடியாமலிருந்தது சிங்களவர் தமிழரை வெறுத்தாலும் சிங்களக் கலை என்ற நூலை வெறுக்க முடியாது இந்நூலை வெறுக்க முடிய விட்டால், ஆனந்த குமாரசாமியையும் அவர்கள் வெறுக்கமுடியாது அப்படியாயின் அவர்கள் இந்நூலை எழுதிய தமிழனையும் வெறுக்கமுடியாது

திருஆனந்தகுமாரசாமிக்கு 30 மொழிகள் தெரியும் அப்படிப்பட்ட சிறந்த வல்லுநர் சமஸ்கிருதத்தில் பெரும் மேதை தெலுங்கு மொழியும் பயின்று ஓர் அபிநயக் கட்டுரை எழுதியிருக்கிறார்.

இந்திய ஓவியக்கலை பற்றி அவர் மேலும்கூறியதாவது:

ஓவியக்கலைநான் பயிலவில்லை ஓவியக்கலையில் இந்தியாவில் ஆர்வம் குறைந்துள்ளது தமிழ் நாட்டில் எந்தப் பெரும் புலவரும் ஓவியக் கலை பற்றிப் பேசும்படி சொன்னால் ஒருவார்த்தையும் பேசமாட்டார்கள். கம்பராமாயணத்திலும், சிலப்பதிகாரத்திலும், அக்கலையைப்பற்றி என்னென்ன கூறியிருக்கிறதென்பதை விளக்கி, பேச்சை முடித்து விடுவார்கள்.

இந்தியாவில் பல ஓவியங்கள் இன்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் காலத்தில் வரையப்பட்டதென்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியங்களில் பல, கலைக்களஞ்சியத்தில் தெளிவாகப் படங்களுடன் விளக்கப்பட்டிருக்கின்றன.

தமிழரின் முதன்முதலான வரிவடிவம் ஓவியந்தான். 5,000ம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட முத்திரை, ஓவிய எழுத்து இந்தியாவில் மட்டுமல்ல, எகிப்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முதன்முதலாக மனிதன் ஓவியங்கள் மூலந்தான் பேசினான் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியும். ஓவிய எழுத்துக்கள் பின் ஒலி வடிவம் பெற்றன.



புதுக்கோட்டையில் சின்னமலைக் குகையில் தீட்டப்பட்ட ஓவியங்கள் பல வருடங்களுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓவியங்கள் 6ம் நூற்றாண்டில் தீட்டப்பட்டதென பிரெஞ்சு நிபுணர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். இந்தியாவில் காணப்பட்ட ஓவியக் கலையில் இது சிறந்தது எனப் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஓவியங்களைப் பார்வையிட்ட ஈரான் தேசத்து ஓவிய நிபுணர், சிகிரியா, அஜந்தா ஓவியங்கள் ஓரேமாதிரியாக இருப்பதாகவும், சின்னமலைக் குகை ஓவியங்கள் இவற்றிலும் சிறந்ததென்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். சின்னமலை ஓவியங்கள் பற்றி அந்த நிபுணர் நீண்ட நாட்கள் ஆராய்ந்து, தமது நாட்டிற்கு அவற்றின் மாதிரிப் படங்களை எடுத்துச் சென்றுள்ளார். அதன் பின் அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், வேறு பல நாட்டவர்கள் இந்த ஓவியங்களை வந்து பார்த்து அதைப்பற்றி ஆராய்ச்சி நடத்தினார்கள். தமிழ் மக்களில் ஒருவர்கூட அந்த ஓவியங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்தவில்லை அங்கு சென்ற சில தமிழர்கள் அந்த ஓவியங்களை விரல்களினால் சுரண்டிவிட்டிருக்கிறார்கள். இந்த ஓவியங்கள் எவ்வளவு பெருமதி வாய்ந்தவையென்று தமிழருக்குத் தெரியவில்லை. அந்தக் குகைக்கருகிலுள்ள செட்டிநாட்டு மக்கள் அங்கு வந்து குகைக்குள் அடிக்கடி சமையல்செய்வதால் புகைபிடித்துப் பல ஓவியங்கள் பழுதடைந்துவிட்டன. மாடு, ஆடு மேய்க்கும் சிறுவர்கள் அங்கு வரும்போது ஓவியங்களுக்குச் சாணம் அடித்து வருகிறார்கள். இதனால் அரசாங்கம் அக்குகை வாசலுக்குப் பூட்டுப்போட்டு, தற்பொழுது பாதுகாத்துவருகின்றது. காவலாளி ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

தஞ்சாவூரிலும், காஞ்சிபுரத்திலும் தற்பொழுது சில ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஓவியங்களில் சில பகுதிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. ஓவியங்கள் பாதுகாக்கப்படவேண்டும்."

# ஐயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து ஒருபுது விதமான கல்யாணப் பத்திரிகை கிடைத்தது. மணமகன் பெயர் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, மணமகள் ருக்மிணி. இம்மாதம் 25-ம் திகதிவியாழக்கிழமைகொழும்பிலே விவாகம் நடப்பதாயும், குடும்பசகிதம் வந்து மேற்படி உற்சவத்தில் பங்குபற்றி, ஸ்ரீ குருவாயூரப்பனின் பரிபூர்ண அனுக்கிரகத்தைப் பெற்றுய்யுமாறும் அன்புடன் வேண்டிக்கொள்வதாக ஸ்ரீராமகான சபை முதியோர் ஸம்ஸ்கிருத வகுப்பு அங்கத்தவர்கள் அழைப்பிதழை அச்சிட்டு அனுப்பியுள்ளனர்.

முதலில் சற்றே திகைத்தேன். கடிதம் அனைத்தையும் படித்தபின்புதான் விஷயம் புரிந்தது. ஸ்ரீராமகான சபையிலே பிரம்மஸ்ரீ நாராயண வாத்தியார், ருக்மிணி கல்யாண மகோற்சவ பிரசங்கம் செய்கிறார். பஜனை முதலியன நடைபெறுமென்று நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளது.

இக்கடிதத்தைப் படித்ததும், இந்தமாதிரியான அழைப்பிதழ் ஏதும் முன்னர் 'ஒரிஜினல்' ருக்மணி கல்யாணத்தில் அனுப்பியிருக்கமுடியுமா? என்ற சந்தேகமே ஏற்பட்டது.

ஏனெனில், ருக்மணி காதலித்த வாலிபரான ஸ்ரீகிருஷ்ணனை, அவளது சகோதரர்கள் ஒப்பவில்லை வேறு யாருக்கோ கல்யாணம்பேசி விட்டார்கள். ருக்மணிக்கு மிகக்கவலை. ஸ்ரீ கிருஷ்ணனையே விவாகம் செய்து கொள்ளத் தீர்மானித்துத் தவம் கிடந்தாள். காதலனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது, அவரும் சரியான சமயத்தில் வந்து காதலியை அழைத்துச் செல்லுவதாக ரகசியமாகத் தகவல் தெரிவித்துவிட்டாராம்.

மணப்பெண், தனித்து கௌரிபூஜை செய்துகொண்டிருக்கையில், ஸ்ரீகிருஷ்ணன் வந்து காதலியை ரதத்தில் வைத்துக்கொண்டு சென்றுவிட்டதாயும், இதை அறிந்த மணப்பெண்ணின் சுற்றத்தார், ஸ்ரீ கிருஷ்ணருடன் கடும் போரிட்டதாயும். அப்போரில் மணமகன் வென்றுவிட்டதாகவும் பலர்மாண்டதாகவும் கதை.

இவ்வளவு அமர்க்களத்துக்குப் பின், நடந்ததே சாட்சாத்ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா-ருக்மணி கல்யாணம், அப்படியிருக்க அந்த விவாகத்துக்கு அழைப்பிதழையாரும் அனுப்பியிருக்க முடியுமா? அன்று ஏற்பட்டிருந்த அந்தக் குறையை ஸ்ரீராமகான சபையார் இன்று நிறைசெய்துள்ளதாகவே உணர்ந்தேன்.

0 0 0

இந்தப் புராணக்கதை நமக்குத் தெரிவிக்கும் பாடமென்ன? விவாக விஷயத்தில் பெண்ணின் இஷ்டமே முடிவானது. இந்த விஷயத்தில் வேறு சுற்றத்தார்கள் தலையிட்டு பெண்ணுக்கு விருப்பமில்லாத ஒருவரை விவாகம் செய்யுமாறு வற்புறுத்துவது சரியல்ல என்பதுதான். இது முற்றிலும் பெண்ணின் சொந்த வாழ்க்கையைப் பற்றியதால், அவளது விருப்பத்துக்கு மாறாக எதுவுமசெய்ய வேண்டாமென்பதையே இக்கதை உணர்த்துகிறதல்லவா!

இக்காலத்திலே குடும்பத்தில் ஒரு பெண் பிறந்ததுமே பெண்ணின் விவாகத்தை பற்றியே பெற்றோர்கள் கவலைப்படுகிறார்கள். சீதனம் நிறையக் கொடுத்து பெண்ணுக்கு நல்ல மாப்பிளையைத் தேடி மணம்முடிக்கவேண்டுமென்றுபடாதபாடெல்லாம் படுகிறார்கள். பெண்ணின் இஷ்டத்துக்கு இவ்விஷயத்தை விட்டு, பெண்ணுக்கு சுயம்வர உரிமையை அளிப்பதாயின் கல்யாணப் பிரச்னைகளும் பெற்றோர் கவலையும் பெரிதும் குறையும்.

இன்றும் சில விவாகங்கள் இப்படி நடக்கின்றன. முதலில் பெற்றோர்கள் ஒப்ப மறுத்தாலும், குழந்தைகள் பிறந்தபின் எல்லாம் சரியாகிப்போகின்றன. கொழும்பிலே ஒரு பிராமண வாலிபர் சிங்களப்பெண்ணை பெற்றோர் விருப்பத்துக்கு மாறாக மணம் செய்து கொண்டுவிட்டார். தாயார்

# 'அந்த மெல்லிய சிவலைப் பொடியன்' தான் பண்டிதமணி

— கச்சாய்ப் புலவர் சி. சின்னையா —

ஒரு நாள் —

அது இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்பு ஒரு ஐப்பசி மாதமும் சுக்கில பக்கமும் பஞ்சமித் திதியும் கூடிய சுபநாள்.



...த்திலேயே இருந்தேன்.

நான் வடக்குப் பக்கமாச் சுவரோரமாக இருந்து பொடியன்சொல்லுகிற பயனைக் கவனித்தேன்.

பாட்டிலேயுள்ள ...

# 'அரசர்களை பாடியகாலத்தில் விடுதலைக்குப்பாடினார்பாரதி'

## காங்கேசன்துறையில் நுண்கலை செல்வன் இராகவன்

அளவெட்டி, திங்கள் "தெய்வத்தையும், அரசர்களையுமே மாறிமாறி அப்போது வாழ்ந்த கவிஞர்கள் பாடினார்கள் ஆனால், பாரதியாரோ நாட்டின் விடுதலைக்காக கவிபாடி...

இதை அறிந்து தமிழ்இனம் பெருமைப்பட வேண்டிய தொன்றாகும்."

நீராவிக்கப்பலைத் தயாரித்து எமது கப்பலின் பெருமையை மங்கச்செய்தாலும் இங்கு வல்வெட்டித்துறை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக் கொண்டாடும் இச்சமயத்திலே அவர் இந்தியாவின் மக்களுக்கும் உலகுக்கும் செய்துள்ள மகத்தான தொண்டையும் அவரது எளிய வாழ்க்கையையும் பிறர் உணர்ச்சிகளை அவர் பெரிதும் மதித்து உலகுக்குக் காட்டியதையும் மனித சகோதரத்துவத்தின் முக்கியத்தையும், பலாத்காரத்தை கைவிட்டதையும், சமாதான விண்வெளிவீரர்கள் சென்றது, மனித சரித்திரத்தில் மிகப் பெரிய சம்பவமென்று கூறுகின்றனர். இதே சமயம் மனிதப் பண்புகளிலே மிக மிக உச்சக் கட்டத்தை இக்காலத்திலே மகாத்மாகாந்தி அடைந்துள்ளது மனித சரித்திரத்தில் மிகப்பெரிய சாதனையென்று அதிக நியாயத்துடன் கூறலாம்.

## சபாஷ் ஆரியரத்னு!

சிரமதான சமூக சேவைக்காக திரு. ஏ டி. ஆரியரத்னுவுக்கு பிலிப்பைன்ஸ் நாட்டின் மாக்ஸேஸே பரிசுகிடைத்தது நம்நாடனைத்துக்கும் கிடைத்த ஒருகௌரவமாகும். இலங்கையிலே எந்தச் சமயத்தவரும் சமூகத்தவரும், ஓர் இலங்கை மகனுக்கு அளிக்கப் பெற்ற இந்தப் பரிசைப்பற்றி மகிழ்ச்சியடைய நியாயமுண்டு. நாடனைத்துக்கும் தொண்டாற்றுவதிலே திரு. ஆரியரத்னு ஆர்வம்மிக்கவரென்பதும் பொது விஷயங்களில் அவர் துணிச்சலுடன் காரியம் செய்வரென்பதும் பலரும் அறிவர்.

இந்தியாவிலுள்ள பெருந்தலைவர் ஆசார்ய விநோபாபாவேயைப் பின்பற்றி இலங்கையிலே சிரமதான, சர்வோதய இயக்கங்களைப் பரப்ப மிகவும் பாடுபட்டு வருபவர். அவர் இந்தியாவுக்கு சிரமப்பட்டுச் சென்று விநோபாவைக் கண்டு அவருடன் பேசி பல விஷயங்களையும் தெரிந்துசிரமதானப் பணியைச் சிறப்பாகச் செய்ய அவர் எடுத்த முயற்சிபோற்றத் தக்கதாகும். விநோபாவுடன் தொடர்புகொண்டு அவரது யோசனைப்படி, இலங்கையில் சிரமதானப் பணியை ஆரியரத்னு அவர்கள் தம்மாலியன்றவரை திறமையாகச் செய்ய முயன்றுவருவது சுலபமானதன்று. அவர் தாம் மட்டுமன்று மற்றும் பலரை இம்மேலான பணியில் ஈடுபடச் செய்துள்ளார். இத்துடனே அவர் மகாத்மா காந்தி நூற்றுண்டு ஜயந்திவிழாவை இலங்கையில் கொண்டாட தீவிர முயற்சிஎடுப்பதுடன் அச்சபையின் கூட்டுக் காரியதரிகளுள் ஒருவராகமிவுருக்கிறர். இதற்காகவும் அவருக்குநாடுநன்றிசெலுத்த வேண்டும்.

ஒரு மகாவித்யாலயத்தின் தலைமையாசிரியர் பதவியை அவருக்கு அளித்த போது, அது வேண்டாமென்றும், அதை ஒப்புக் கொண்டால் தமக்கு பொதுச் சேவை செய்ய முடியாது போகுமென்று அவர் கருதியதாகவும், அவ்வளவு தியாக மனப்பான்மையுள்ளவரென்றும் சமீபத்தில் கல்வி அமைச்சர் அவரைப் பாராட்டியுள்ளார். இப்போது கிடைத்துள்ள பெரும் பரிசுத் தொகையையும் அவர் தமக்காகப் பயன்படுத்திக் கொள்ள மறுத்து இலங்கையில் சிரமதான இயக்கத்துக்கு அளித்ததால் அவரது புகழ்மேலும் உயர்ந்துள்ளது. இவ்விததியாகபுத்தி மிக அரிதாவதுடன், பிறருக்கும் இது வழிகாட்டுவது போலாகும். சிறப்பாக அவர் செல்வந்தராக இல்லாதபோது இவ்வித தியாகம் செய்தது மிகவும் பெரிய காரியம்.

பல வெளிநாடுகளுக்கும் அவர் இப்போது சென்று சிரமதான சேவையைப் பற்றிப் பேசுவதால் இலங்கையின் மதிப்பும் அங்கு உயர்வதுடன், அவர் நம்மக்களுக்கு அதிக சேவை செய்யவும் தம்மைத் தகுதியாக்கிக் கொண்டு திரும்புவாரென்று நம்புவோம். அவரது சிறப்பான குணங்களிலொன்று அவருக்கு சிறிதும் வகுப்புவாத மனப்பான்மை இல்லாததாகும். இலங்கையிலுள்ள எல்லா மக்களையும் தமது சகோதரராக மதிப்பவர். விநோபாவை அவர் பின்பற்ற முயலுவதால் அவர் இவ்வித மனப்பான்மை கொண்டிருப்பதில் வியப்பில்லை. அவர் திரும்புகையில் இந்தியா வழியாக வந்து ஆசாரிய பாவேயைச் சந்தித்து நம் இலங்கைக்கு அவரை வரும்படி, பிரதமரின் அனுமதியுடன் அழைத்து அதில் வெற்றி பெறுவாரர்யின், அது நம் நாடு முன்னேற உதவியாக இருப்பதுடன் அதுபெரிய தேசியப் பணியுமாக இருக்கும்.



ஒரு நாள் —

அது இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்பு ஒரு ஐப்பசி மாதமும் சுக்கில பக்கமும் பஞ்சமித் திதியும் கூடிய சுபநாள்.

அன்று எட்டு மணி இருக்கும். என்னையும் எனது சக மாணவன் (இவர் சாவகச்சேரி வடக்கில் அரசடி என்ற இடத்திலுள்ளவர்) திரு சிதம்பரப்பிள்ளை என்பவரையும் எங்கள் வித்தியா குரு உயர் திரு. ஏகாம்பரநாதன் அவர்கள் தனங்களப்பைச் சேர்ந்த காரைத்தூர் விநாயகராலயத்தில் சூரபத்மன்வதைப் படலம் படித்து உரை சொல்லுவதற்காக அந்த ஆலயப் பரிபாலகர் திரு. சிதம்பரப்பிள்ளை (இவரைச் 'சைவர்' என்று தான் அநேகமாகச் சொல்லுவது வழக்கம்) என்பவருடன் அனுப்பினர்கள்.

நாங்கள் மூவரும் மீசாலை தெற்கில் ஆசிரியரவர்களுடைய வீட்டிலிருந்து கால் நடையாகவே தனங்களப்புக்குப் போய்ச் சேர்ந்தோம்.

சாவகச்சேரி கடந்தவுடன் அநேகமாக எங்கும் வழி நடை தண்ணீருக்கூடாகத்தான் இருந்தது. ஆனாலும் கால் கழுவிக்கொண்டு ஆலயத்துள் பிரவேசித்தோம்.

### புராண படனம்

சுணங்காமல் குத்துவிளக்கேற்றிப் படிக்கவேண்டிய இடத்தில் வைத்து விபூதி மடல், சந்தன வட்டகை, பீடத்தில் கந்தபுராணத் திருமுறை என்பன வைக்கப்பெற்றன.

நாங்கள் விபூதி தரித்து விநாயகப்பெருமானை வணங்கிக்கொண்டு நான் அருத்தஞ்சொல்பவரிருக்குமிடத்திலும், சிதம்பரப்பிள்ளை (எனது சகபாடி) வசிக்கிற இடத்திலுமாக இருந்தோம்.

வழக்கப்படி காப்புச் செய்யுள்கள் மூன்றும் நானே சொன்னேன். "கொற்றவேற்படை"யிலிருந்து ஆரம்பித்துப் படிப்பு நடந்தது. அப்பொழுது அந்த ஆலய எல்லைக்குள் ஆக நான்கு பேர்கள் மாத்திரந்தான் இருந்தார்கள்.

ஒன்று நான், மற்றவர் வாசிப்பவர். அடுத்தவர் கோவில் முகாமையாளர். இன்னுமொருவர் அவர் 'மெல்லிய சிவலைப் பொடியன்.'

கோவிலெசமான் சிதம்பரப்பிள்ளையவர்கள் மறுநாள் கந்தசஷ்டி தினமாதலால் ஏதோ காரியார்த்தமாக இருந்தவர் இடையிடையே எங்கள் பார்வைக்குத் தோற்றுவார்.

படிப்புக் கேட்கிற கட்சியைச் சேர்ந்தவர் அந்தச் சிவலைப் பொடியன்ஒருவருந்தான்.

அவர் வாசித்தவருக்கு வலப்பக்கத்தில் சமீபமாகக் கைகளை மார்பிற் கட்டியபடி அசைவின்றியிருந்து நான் கருத்துச் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அப்படி வேறொரு வளர்ந்த மனிதர் என்னைக் கவனித்திருந்தால் நான் கருத்துச் சொல்வதில் தடுமாறியிருப்பேன்.

படிப்பு விறுவிறுப்பாகப் போய்க்கொண்டிருந்தது. சூரபத்மன்வதைப் படலச் செய்யுள்கள் ஐந்நூற்றேழு. அவற்றில அரைவாசியைக் கடந்துவிட்டோம்.

"உள்ளடிவரைகள் யாவும்" என்ற தொடக்கமுடைய செய்யுள் முதலாகச் சில செய்யுள்களுக்குக் கருத்துச் சொல்ல எனக்கு ஆசை தான். அந்த இடம் வரவில்லை.

### சிவலைப்பொடியனும் பயனும்

அப்பொழுது எனக்கு வயது பதினன்கு. வாசித்தவருக்குப் பதினைந்து. புராணப் படிப்புக் கேட்ட பொடியனுக்குப் பன்னிரண்டு தானிருக்கும்.

நித்திரை செய்வதில் அப்பொழுது நான் தீவிரவாதி. "சிதம்பரப்பிள்ளை இனி நீர் வந்து கருத்துச் சொல்லும் பொடியன் வாசிக்கட்டும்" என்று நான் சொன்னேன். "இல்லைநான் வாசிக்கிறன், பொடியன் பயன் சொல்லட்டும்" என்று தசித்துக்கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை பதில் சொன்னர்

உடனே நான் எழும்பினேன். பொடியன் விரைவாக வந்து நானிருந்த இடத்திலேயே இருந்தான்.

நான் வடக்குப் பக்கமாகச் சுவரோரமாக இருந்து பொடியன்சொல்லுகிற பயனைக் கவனித்தேன்.

பாட்டிலேயுள்ள சொற்களுக்குக் கருத்துத் தெரியாமையால் அவைகளை விட்டும் இல்லாத கருத்தைச் சொல்லியும் சரிக்கட்டுகிற பயன்காரர்கள் சிலரைஎனக்குத்தெரியும். பொடியனிடத்தில்அந்தப் பண்பு துளிகூட இருக்கவில்லை.

இப்படிப்படிப்பு நடந்துகொண்டிருக்க 'வெள்ளியெழுந்தது, ஞாயிறெழுந்த திசையே' என்றபடி சுக்கிரன் அன்று கன்னிராசியில் நின்றிருக்கவேண்டும். தனங்களப்பு விளைநிலப்பிரதேசம் சுக்கிரனுந்தோற்றி இருளும் புரளத் தொடங்கிவிட்டது.

அப்பொழுது நானிருந்த வீடு அல்லாரை என்ற கிராமத்தில்,' வழக்கப்படி வீட்டுக்கு நான் போகாவிடில் தகப்பனர் கடிவார். தனங்களப்பு எங்கள் வீட்டிலிருந்து ஐந்து மைல் தூரம்

எனது சகபாடியை விழித்து, 'நான் போகவேண்டும், நீர் நாளைப்பகல் இங்கே நின்று கந்தசட்டி வைபவத்தை முடித்துக்கொண்டு இரவு இராப்படிப்புக்கு வாரும்' என்று சொல்லி ஆலய நிர்வாகியிடத்திலும் அனுமதி பெற்று வீடு வந்து சேர்ந்தேன்.

அன்றிரவு வழக்கம் போல் நான் இராப்படிப்புக்காக என்னுடன் வருகின்ற மற்றை மாணவர்களோடு ஆசிரியரவர்களுடைய வீடு போய்ச் சேர்ந்தேன்.

கந்தசட்டி முடிந்தது சிதம்பரப்பிள்ளையும் உரிய நேரத்துக்கு வந்து சேர்ந்தார்.

### அந்தப்பொடியன் யார்?

சிதம்பரப்பிள்ளையிடம் நான் கேட்டது, 'அந்தப் பொடியர் யார்' என்று தான்.

'அவர் மட்டுவிலிலுள்ளவர். தனங்களப்பில் இனத்தவர்களிருக்கிறர்கள். 'கணபதிப்பிள்ளை' என்பது அவருடைய பெயர' என்று சிதம்பரப்பிள்ளை மறுமொழி சொன்னர். உடனே சிதம்பரப்பிள்ளைக்கு நான் சொன்னேன், 'அந்தப் பொடியன் பிற்காலம் ஒரு கல்விமானுக வருவான்' என்று.

இது, நான் சொன்ன தினந்தான், சூரசங்காரம் முடிந்து கந்தசட்டிநாள்.

### பண்டிதமணி

இன்று பண்டிதமணியாகவும் சைவசித்தாந்த சாகரமாகவும் யாழ்ப்பாணத்தில் ஒளி வீசிக்கொண்டிருப்பவர் தான், நான் தனங்களப்பில் அந்த விநாயகராலயத்திலே கண்ணுற்றமெல்லிய சிவலைப் பொடியன்.

நான் தனங்களப்பிலே கண்டபின் சில வருடகாலம் இலக்கிய வகுப்பிற் பயின்று பின் அடுத்த ஆச்சிரமக் கதவு திறக்கப்பட்டு லௌகீகத் தொல்லைகள் துணை நின்றமையால் திரு. கணபதிப்பிள்ளையவர்களை நான் காணவுமில்லை; கேள்விப்படவுமில்லை புதின இதழில் பண்டித வகுப்பில் சித்தியெய்தியது கணபதிப்பிள்ளையும்என்றிருந்ததை வாசித்த பொழுதுதான் தனங்களப்பு விநாயகராலயமும் அங்கே நான் கண்ட சிவலைப்பொடியனும் எனது ஞாபகத்துக்கு வந்தன.

நான் முக்கால் நூற்றுண்டைச் சமீபித்தாலும், மேற்குறிப்பிட்ட விஷயங்கள் நேற்று நடந்தவை போல நினைவில் இருக்கின்றன.

[பண்டிதமணி அவர்கள் தமது எழுபத்தோராவது பிறந்ததினத்தைச் சமீபத்தில் தனங்களப்பு காரைத்து விநாயகர் ஆலயத்தில், இறை வழிபாட்டின் மூலம் அமைதியாகக் கழித்தார்கள்.]

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அளவெட்டி, திங்கள்

"தெய்வத்தையும், அரசனையுமே மாறிமாறி அப்போது வாழ்ந்த கவிஞர்கள் பாடினர்கள் ஆனல், பாரதியாரோ நாட்டின் விடுதலைக்காக கவிபாடினர். விடுதலை உணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் பாரதியின் பாடல்கள். அமைந்திருந்தன"

காங்கேசன்துறை இளம் தமிழர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற பாரதி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழக அறிஞர் நுண்கலைச் செல்வர் திரு. ஏ. இராகவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி திறந்த வெளியரங்கில் காங்கேசன் துறைப்பட்டின சபைத் தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. இராகவன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"உலகத்தில் கட்டப்பட்ட கப்பலின் முதல் கப்பல் கட்டிய பெருமை எமக்கு உள்ளது போல்மிகவும்பலம் வாய்ந்த கப்பலையும் நாம் செய்தோம் என்று கூறலாம் நாம் முதல் கட்டிய "திருக்கோணமலை" என்ற கப்பல் இன்றும் மிகவும் திடத்துடன் இங்கிலாந்தில் ஓடுகின்றது. இதற்குப்பின் மற்ற நாட்டவர்கள் அமைத்த கப்பல்கள் உடைந்தும் எமது கப்பல் உடையவில்லை.

இதை அறிந்து தமிழ்இனம் பெருமைப்பட வேண்டிய தொன்ருகும்."

நீராவிக்கப்பலைத் தயாரித்து எமது கப்பலின் பெருமையை மங்கச்செய்தாலும் இங்கு வல்வெட்டித்துறையில் இருந்து பர்மாவுக்கு ஒரு கப்பல் சென்றதாகக் கூறும்போது மகிழ்ச்சியடைகிறேம்.

இன்று தமிழர்களால் ஆட்சி செலுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளபோது கப்பல் கலையை அரசுமறக்கவில்லை. ஆட்சிக்கு வந்ததும் விசாகபட்டினத்தில் கப்பல்கள்உருவாக்கப்பட்டு வருகின்றன.

சோவியத் மக்கள் பாரதியை எவ்வளவாகப் போற்றுகிறர்கள். அவரின் பாடல்களை தமது புத்தகங்களில் போடுகிறர்கள் அவர்கள் பாரதியைப் பயன்படுத்தும் அளவுக்கு எம்மவர் பயன்படுத்துவதில்லை

சகல மக்களும் ஒன்றுதிரண்டு ஒரே தலைமையின் கீழ் தமிழக அரசு உருவாவதற்கு முக்கிய காரணமாகஇருந்தவர்கள்மாணவர்கள்தான். அங்கு பல கட்சிகள் இருந்தன அவற்றை ஒன்று சேர்த்து தமிழக அரசை உருவாக்கிய பெருமை மாணவர்களையே சாரும்.

இதை யடுத்து நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு பண்டிதர் சச்சிதானந்தம் தலைமை வகித்தார்

இதில் கவிஞர் கந்தவனம் திரு. நாவேந்தன், திரு. செல்லத்துரை, திரு. கருணனந்தசிவம், காரை சுந்தரம் பிள்ளை, திரு. வேலாயுதம் ஆகியோர் பங்குபற்றினர்கள்.

இறுதியில் மன்றத்தினரின் "மனக்கோயில்" என்ற நாடகமும் இடம் பெற்றது.

செல்வன் கனக. மகேந்திரா வரவேற்புரை நிகழ்த்தினர்.

## நன்றி நவிலல்

இராமச்சந்திரன் குடும்பத்தினர் திரு. கனகசுந்தரம் இராமச்சந்திரன் (சிரேஷ்ட அத்தியட்சகர் தபாற் கந்தோர், யாழ்ப்பாணம்) அவர்களது மரணச் சடங்குகளில் கலந்து கொண்டவர்கட்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மலர் வளையங்கள் சாத்தி அவரது இறுதி மரியாதையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேம். இ சிறீகுமார்குடும்பத்தினர் தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 1089

பிறந்தபின் எல்லாம் சரியாகிப்போகின்றன. கொழும்பிலே ஒரு பிராமண வாலிபர் சிங்களப் பெண்ணை பெற்றேர் விருப்பத்துக்கு மாருக மணம் செய்து கொண்டுவிட்டார். தாயார் அந்தப் பெண்ணுடன் பேசுவதில்லை. தன் மகன் வந்தால் மட்டும் பேசுவார். குழந்தை பிறந்தது. அன்னையின் வைராக்கியம் தளர்ந்தது. பேரப்பிள்ளை, சிங்கள மருமகள் எல்லாரும் வீட்டுக்கு வந்துவிட்டனர். எல்லாம் சகஜமாகிவிட்டது! காலம் எல்லாப் பிரச்னைகளையும் அமைதியாகத் தீர்த்துவிடுகிறதல்லவா.

இந்தக் கலப்பு மணத்துககு பெண்ணின் குடும்பத்திலே எவ்வளவு தடைகளும் ஆட்சேபங்களும் இருந்தனவோ! விவாகத்துக்குப் பின் அந்த வாலிபரின்குடிப் பழக்கத்தை விட்டுவிடும்படி சிங்கள மனைவி செய்துவிட்டதாயும், அவர்கள் நல்லபடி வாழ்வதாகவும் தெரிகிறது. இப்படி இன்னும்எவ்வளவோ!

0 0 0

அறிஞர் இராகவன் அவர்கள் யாழ்ப்பாணத்திலே முந்தாநாள் இரவு மூத்தநாயனர் கோயில் சனசமூக நிலையத்தின் இலக்கிய மன்றத்திலே, ஈழத்தையும், அதன் தமிழ்க் கலைஞர்களையும் பாராட்டிப் பேசியதைக் கேட்க மிகப் பெருமையாக இருந்தது. ஆனல் இன்றைய அரசியலிலே இங்கு தமிழர் படும் சிறுமைகள் நினைப்பு வந்ததும், "அந்த நாளும் வந்திடாதோ" என்று மனம் ஏங்கியது.

0 0 0

திராவிடர் யார், ஆரியர் யார்? என்று ஆராய்ச்சியாளரான அறிஞர் அவர்களைக் கேட்டேன். இககாலத்தில் எல்லாம் கலந்துவிட்டதென்றும், பிரித்துக்கூறமுடியாதென்றும் சொன்னர். சுவாமி விவேகானந்தர் இதைப்பற்றிப் பேசுகையில், ஆரியர்— திராவிடர்பிரிவினைகள், வெளியாரின் கற்பனை என்றும், இந்திய மக்களைப் பிரித்தாளச் செய்த சூழ்ச்சி என்றும் கூறியுள்ளார்.

இதைப்பற்றி பல்கலைக் கழகமாணவர் யாரும், புதிய ஆராய்ச்சி செய்து உண்மையை வெளியிட்டால், பெரிதும் பயன்படலாமல்லவா?

0 0 0

நீதியால் வாழமாட்டேன் நித்தலும் தூயேனல்லேன், ஓதியும் உணரமாட்டேன் உன்னையுள் வைக்கமாட்டேன், சோதியே சுடரே யுன்றன் தூமலர்ப் பாதங் காண்பான், ஆதியே அலந்து போனேன் அதிகை வீரட்டனீரே.

— அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org